விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 சித்திரை: 29 ஷவ்வால் பிறை: 16 இதழ்: 89
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 12-05-1990

அடுத்த ஆண்டு

## பி.பி.ஸி. தமிழோசையின் 50வது ஆண்டு நிறைவு!

[லண்டன்]

லண்டன் பி. பி. ஸி. யின் தமிழோசையின் 50 வது ஆண்டு நிறைவுவிழா அடுத்த ஆண்டு வெகு விமர்சையாகக் கொண்டாடப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

(8-ம் பக்கம் பார்க்க)

விரைவில்

## ஜனாதிபதி பிரேமதாசா வடக்கு-கிழக்கு வருவார்

(கொழும்பு)

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா விரைவில் வடக்கு-கிழக்கு பகுதிகளுக்கு விஜயம் செய்யலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இப்பகுதிகளிலுள்ள அரசாங்க அதிபர்கள், உதவி

(8-ம் பக்கம் பார்க்க)

# வடக்கு கிழக்கு உட்பட சகல துறைமுகங்களையும் அபிவிருத்திசெய்ய திட்டங்கள் தயார்!

[கொழும்பு]

**வடக்கு கிழக்கு உட்பட இலங்கையிலுள்ள சகல துறைமுகங்களையும் அபிவிருத்தி செய்வதற்கான பாரிய திட்டங்களை அரசாங்கம் தயாரித்திருப்பதாக தெரியவருகிறது.**

ஜப்பானிய அரசாங்கத்தின் உதவியுடன் இத்திட்டங்கள் மேற்கொள்ளப்படவிருக்கிறது

இதேவேளையில், துறைமுக கப்பல் தொழிலமைச்சர் திரு. ரூபா கருணாதிலக நேற்று அமெரிக்கத் தூதரகப்பொறுப் பதிகாரி திரு. டி. வெஸ்ட் மோர் தம்மைச் சந்தித்த போது துறைமுகங்களை அபி விருத்திசெய்வதற்கான பாரிய திட்டங்கள்குறித்து தெரிவித் திருக்கிறார்.

பிராந்தியத்தில் கப்பல் போக்குவரத்துச் சேவைகளுக் கும், துறைமுகங்களின் பாவனைக்கும் ஏற்றவிதத்தில் புதிய அபிவிருத்தித்திட்டங்கள் மேற் கொள்ளப்படுமென்று தெரி விக்கப்படுகிறது.

அரசாங்க

## புதிய நியமனங்கள் குறித்து கொள்கை அறிவுறுத்தல்

(கொழும்பு)

அரசாங்க உத்தியோகங் களில் புதிதாக நியமிக்கப்படு வோர் எவ்வாறு தெரிவுசெய் யப்படவேண்டும் என்பது குறித்த 'கொள்கை அறிவுறுத் தல்களை' பொது நிர்வாக, மாகாணசபை, உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் திரு. பெஸ்ரஸ் பெரேரா வெளியிட் டுள்ளார்.

இதற்கமைய அரசாங்க உத் தியோக, மாகாணசபை, அரசு கூட்டுத்தாபன மற்றும் அரசு தொழிற்துறைசார்ந்தநிலையங் களுக்கு புதிதாக நியமனங்கள் பெறுவோர் விடயத்திலேயே இந்தக் கொள்கை அறிவுறுத் தல் கண்டிப்பாக அமுல்படுத் தப்படவுள்ளது.

இக்கொள்கை அறிவுறுத்த லின் படி, புதிதாக நியமனம் பெறுவோருக்கு பின்வரும் தகு திகள் எதிர்பார்க்கப்படும்; மாகாணசபைக்கான பதவிகள் அந்தந்த மாகாணத்திலுள்ள இனவிகிதாசாரப்படியும், தேசிய ரீதியிலானவை தேசிய ரீதியிலான இனவிகிதாசாரப் படியும் அமையும்.

பதவி வெற்றிடங்கள் குறித்து விபரங்களைவெளியிட புதிய குழு ஒன்று நியமிக்கப்

(8ம் பக்கம் பார்க்க)

## வி. பி. சிங் பார்வையிடுவார்

(புதுடில்லி)

ஆந்திர பிரதேசத்தில் சூறாவளியினால் பாதிக்கப்பட்ட பிர தேசங்களை இந்தியப் பிரதமர்

(8-ம் பக்கம் பார்க்க)

சூறாவளி

## அனர்த்தங்கள் குறித்து ஜனாதிபதி கவலை

[கொழும்பு]

தென்னிந்தியாவில் சூறாவளியினால் ஏற்பட்டுள்ள உயிர்ச் சேதம், பொருட்சேதம் குறித்த அனுதாபச்செய்தியொன்றை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா இந்தியப் பிரதம மந்

(8-ம் பக்கம் பார்க்க)

## சினிமா தியேட்டரில் ஆயுதங்கள் கண்டுபிடிப்பு

(கொழும்பு)

கொழும்பிலுள்ள பிரபல சினிமாத் தியேட்டர் ஒன்று பொலிசாரினால் திடீர் சோதனைக்குட்படுத்தப் பட்டபோது அங்கிருந்து ஆயுதங்களும், வெடிமருந்துகளும் மீட்கப்பட் டன.

விசேட பொலிஸ் அதிரடிப்

(8-ம் பக்கம் பார்க்க)

## மன்னார் ஆதார வைத்தியசாலைக்கு புதிய வசதிகள்

(கொழும்பு)

மன்னார் ஆதார வைத் தியசாலை 2 கோடியே 20 லட் சம் ரூபா செலவில் புனர மைக்கப் பட்டுள்ளது.

சுவிற்ஸலாந்து அரசாங்கத் தின் நிதியுதவியுடன் புனர மைப்பு செய்யப்பட்டு, மருத் துவ உபகரணங்கள் உட்பட ஏனைய வசதிகள் வழங்கப்பட் டுள்ள மன்னார் ஆதார வைத் தியசாலையை சுவிற்ஸலாந்து நாட்டுத் தூதுவர் திரு.ஹென் சேகுனேக் அரச வைத்திய அதிகாரிகளிடம் உத்தியோக பூர்வமாக ஒப்படைத்தார்.

1988-ம் ஆண்டு ஆரம்பிக் கப்பட்ட புனர் நிர்மாண வேலைகளை கட்டிடத் திணைக் களத்தின் உதவியுடனும். சுவி ற்ஸாலாந்து கட்டிடக் கலை ஞர் ஆர். மைரீனின் உதவி யுடனும் நிறைவு செய்யப் பட்டுள்ளது, இதனை சுவிற்ஸ லாந்து விஷேட தூதுக்குழு நிரந்தரமாக அங்கு தங்கியி ருந்து மேற்பார்வை செய்தது.

ஆறு புதிய கட்டிடங்கள் வைத்தியசாலை ஊழியர்க ளின் இருப்பிடங்கள், வார்ட் டுகள், சத்திரசிகிச்சை வார்ட் ஆகியன புனரமைப்பு செய் யப்பட்டுள்ளன. குறிப்பாக

(8-ம் பக்கம் பார்க்க)

## சிபார்சு கடிதங்கள் வழங்கும் எம். பி.களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்!

- லலித்

(கொழும்பு)

முறைகேடான விதத்தில், அரசாங்க துறையில் பதவி நிய மனங்கள் பெறுவதற்கு தமது கட்சி ஆதரவாளர்களுக்குச் சிபார்சுக்கடிதங்கள் வழங்கும் பாராளுமன்றஉறுப்பினர்கள், மாகாணசபை அங்கத்தவர்கள் மீண்டும் தேர்தலில் அபேட்ச கர்களாக நிற்பதைத் தடை செய்யும் சட்டம் விரைவில் கொண்டுவரப்படவிருப்பதாக கல்வி, உயர்கல்வி அமைச்சர் திரு. லலித் அத்துலத்முதலி அறிவித்துள்ளார்.

இதற்கமைய தேர்தல்சம்பந் தமான சட்டமூலத்தில் திருத் தம் கொண்டு வரப்படவுள் ளது.

கடந்த 30-40 ஆண்டு கால

(8-ம் பக்கம் பார்க்க)

பாடசாலை மாணவர்களுக்கு

## மூன்று ரூபா பெறுமதியான உணவு முத்திரை வழங்கப்படும்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு உணவு முத்திரை வழங்கும் பரீட்சார்த்ததிட்டம், கொழும் பிலுள்ள சுற்றுப்புற பாட சாலைகளில் வெற்றியளித்துள் ளதையடுத்து. நாட்டிலுள்ள நாற்பது லட்சத்துக்கு மேற் பட்ட பாடசாலை மாணவர்க ளுக்கு மூன்று ரூபா வீதம், உணவு முத்திரை வழங்கப்பட வுள்ளது,

இந்த இலவச உணவு வழங் கும் திட்டத்துக்கு அரசாங்கம் தினமும் ஒரு கோடியே 35 லட் சம் ரூபாவை செலவிட்டு வரு வது குறிப்பிடத்தக்கது.

(8ம் பக்கம் பார்க்க)

வெசாக் தினத்தன்று

## புனித அரச மரத்தின்கிளை முறிந்ததில் 75 பேர் காயம்

(கொழும்பு)

பௌத்த வரலாற்றுப் புகழ் மிக்க களனி விகாரையிலுள்ள புனித அரச மரத்தின் பாரிய கிளை வெசாக் தினத்தன்று அங்கு திரண்டிருந்த பக்தர் மத்தியில், முறிந்து வீழ்ந்த காரணத்தால் 75 பேருக்கு மேல் காயமடைந்துள்ளனர்.

அறுநூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வயதுடைய, இவ் அரசமரம் கடந்தபுதன்கிழமை மாலை முறிந்து வீழ்ந்ததில் படு காயமடைந்த 31பெண்களும், 5 ஆண்களும் கொழும்பு பெரி யாஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டு சிகிச்சைபெற்று வருகின் றனர்.

பாரிய கிளை முறிந்து வீழ்ந்த தன் காரணமாக விகாரையின் மதிற்சுவர் முற்ருகச் சேத மடைந்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

(அ)

## "அமரர் வணசிங்கா தமிழீழ இலட்சியத்தில் உறுதியாக இருந்தார்"

- பொன் வேணுதாஸ் -

[யாழ்ப்பாணம்]

''அமரர் வணசிங்கா தமி ழீழ இலட்சியத்தில் மிக உறுதி யாக இருந்தார்''

இவ்வாறு நேற்று மாலை யாழ் இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்ற இலங்கைத்தமிழர் ஆசிரியர் சங்கத்தின் முன்னைநாள் தலை வர் அமரர் டி. எஸ். கே. வண சிங்காவின் முதலாவது நினை வஞ்சலிக் கூட்டத்தில் மட்டக் களப்பு மாவட்ட தொழிற் சங்க சம்மேளனச் செயலாளர் சட்டத்தரணி பொன். வேணு தாஸ் உரையாற்றுகையில் தெரிவித்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

பூரண வளைத்திறனுடைய பம்பாய் வெங்காய விதை நாசிக் சிகப்பு ரகம். வியாபாரிகளுக்கு வஃசட சலுகை வழங்கப்படும். கிலோ 375-00 படி கிடைக்கும். பிள்ளையார், 259, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். (சி-3797)

அல்சேசன் ஜேர்மன் சேர்ப்பட் எயர் சிலோன் இன பூச்சி அகற்றப்பட்ட இரண்டுமாதக் குட்டிகள் (ஆணும் பெண்ணும்) விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்ளவும்: ஜேவியர் 249, பலாலி றோட், கந்தர்மடம். (சி-3846)

### நூல்கள்

பிரபல எழுத்தாளர்களினது அனைத்துப் புதிய நூல்களும், மற்றும் றேடியோ மெக்கானிசம், வைத்தியம், தையல் கலை, சோதிடம், சமயம், சமையல், மற்றும் பல ஆராய்ச்சி நூல்கள் அனைத்தும் புதிதாக இறக்குமதியாகி விற்பனையாகிக் கொண்டு இருக்கின்றன. உங்களது அரிய நூல்களை தெரிவுசெய்து கொள்ளுங்கள். பூபாலசிங்கம் புத்தகசாலை, 15/2, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-728)

### VACANCIES

Vacancies for Construction Supervisors, Trainees and Store-Keepers, Bio-data in own hand writing with two recent testimonials before 30-05-90 Apply Advt No- C-3840,. C/o Eelanadu, Jaffna. (C-3840)

### தேவை

ஸ்ருடியோவில் வேலை செய்வதற்கு இளைஞர்கள் தேவை. நேரில் வரவும். தரன் ஸ்ருடியோ. 98, நவீன சந்தை, யாழ்ப்பாணம். போன்: 23858. (சி 3842)

பெண் அச்சுக்கோப்பாளர் அல்லது பழக விரும்புபவர் தேவை. பெயர், விலாசம், பிறந்த தேதி மற்றும் விபரங்களுடன் விண்ணப்பிக்கவும். மோர்வின்ஸ். றபர்சீல் தயாரிப்பாளர், 91/1, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்; (சி-3682)

### காணவில்லை

சோதிடர் செ. சி. சண்முகலிங்கம் என்பவருடைய நீல நிற பாக் ஒன்று ஏழாலைக்கும் இணுவிலுக்கும் இடையில் 9-5-90 மாலை 6 மணியளவில் தவறிவிட்டது. அதற்குள் பஞ்சாங்கமும் ஜாதகக் குறிப்புக்களும் போட்டோ படங்களும் உள்ளன. தயதுசெய்து கண்டெடுத்தவர்கள் தாவடிச் சந்தியில் உள்ள கந்தையா ஸ்ரோசில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். நன்றி! செ. சி. சண்முகலிங்கம் சாஸ்திரியார் தாவடி. (சி-3684)

# கல்விக் கண்காட்சி
## அடுத்த மாதம் நடைபெறும்

(உடுவில்)

இணுவில் அமெரிக்கமிஷன் தமிழ்க கலவன் பாடசாலையில் ஆசிரியர்களும் மாணவர்களும் இணைந்து கல்விக் கண்காட்சி ஒன்றை நடத்தவுள்ளனர்.

ஆண்டு ஒன்று முதல் ஐந்து வரையான வகுப்பு மாணவர்களின் ஒன்றிணைப்புப் பாடக் கண்காட்சியும் ஆண்டு ஆறு முதல் எட்டு வரையான வகுப்புமாணவரின் ஒவ்வொரு பாடத்துக்குமான கண் காட்சியும் இடம்பெறவுள்ளன.

கடந்த கால அசம்பாவிதங்கள், 'ஷெல்' தாக்குதல்கள் ஆகியவற்ருல் சேதமாக்கப்பட்ட இப்பாடசாலையின் கட்டடங்கள் தற்போது பழுது பார்க்கப்பட்டு, கட்டப்பட்டுவருவதாகவும்இக் கட்டடவேலைகள் பூர்த்தியாக்கப்பட்டவுடன் ஜூன் மாத ஆரம்பத்தில் மேற்படி கண்காட்சி நடத்தப்படும் என்றும் பாடசாலை அதிபர் திரு. எஸ். சோதிப்பெருமாள் தெரிவித்துள்ளார். (109)

# உடுவில் பகுதியில் திருட்டு அதிகரிப்பு

(உடுவில்)

கந்தரோடை, உடுவில் கிராமங்களில் இரவுநேர திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

இங்குள்ள கோவில்கள் அடிக்கடி உடைக்கப்பட்டு விக்கிரகங்கள் புரட்டப்படுகின்றன. விக்கிரகங்களுக்கடியில் வைக்கப்படும் இயந்திரத்தகட்டினை எடுப்பதற்காகவே விக்கிரகங்களைத் திருடர்கள் புரட்டுகின்றனர்.

பல கோவில்களில் இப்பொழுது விக்கிரகங்களுக்கு அடியில் பவுணிலான ஆன ஓயந்திரத்தகடுகள் வைக்கப்படுவதில்லை. இருந்தும் திருடர்களின் நம்பிக்கையும் ஆவலும் விக்கிரகம் புரட்டப்பட்ட பின்னர் ஏமாற்றமாகப் பரிணமிக்கின்றது.

போலியான துப்பாக்கிகளுடனும் இரும்பு, பொல்லுப்போன்ற சிறு ஆயுதங்களுடனும் இப்பகுதியில் திருடர்கள் நடமாடுகிருர்கள்.

வீட்டில் யாரும் இல்லை என்ருல் பூட்டை உடைத்து, பொருள்களைக் களவாடிச் சென்றுவிடுகின்றனர். சில வேளைகளில் வீட்டுச்கதவுகள் தட்டப்படும்போது வீட்டுக்காரர் கதவைத் திறந்து வெளியே வந்தால் ஆயுதங்களைக் காட்டி கொள்ளை நடக்கிறது.

இரவுவேளைகளில் வீட்டுக்காரர் விழிப்புடனிருந்து கூக்குரலிட்டால் திருடர்கள் ஓடி ஒழிந்துகொள்கின்றனர். (109)

## புனர் நிர்மாணத் திட்டம்:
# பூநகரி கிராமத்திற்கு அதிக பணம் ஒதுக்கீடு!

[நெடுந்தீவு]

பூநகரி புனர் நிர்மாண வேலைத்திட்டத்திற்கு ''உலக தரிசம்'' ஒன்பது லட்சத்து நாற்பத்தி இரண்டாயிரத்து ஐநூறு ரூபாவை வழங்க முன் வந்துள்ளது.

இவ்வாறு ''உலக தரிசனத்தின'' வடபிராந்திய இணைப்பதிகாரி திரு. பென் குணரத்தினம் தெரிவித்தார்.

வடபகுதியிலுள்ள பல கிராமங்களுக்கு உலகதரிசனத்தால் புனர்நிர்மாண வேலைகளுக்கு கணிசமான அளவு நிதி வழங்கப்பட்டுள்ள போதிலும் பூநகரிக்கிராமமே இதுவரையில் அதிகரித்த உதவியைப் பெறச் சந்தர்ப்பம் கிட்டியுள்ளது.

இந்நிதி திட்ட அமுலாக்க அமைச்சின் உதவிப் பணிப்பாளர் திரு. ரி. இராஜநாயகம் தலைமையில் இயங்கிவரும் பூநகரி அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத்தின் ஊடாக வழங்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

வழங்கப்படும் நிதியில் கடற்தொழிலுக்கு சுமார் மூன்றரை லட்சமும், விவசாய உபகரணங்களுக்கு சுமார் இரண்டு லட்சமும் மற்றும் சிறுகைத்தொழில், சிறுவியாபாரம் சுழற்சிமுறைக்கடன், கிணறுகள் புனர் அமைப்பு போன்றவற்றிற்கு மிகுதியும் பயன்படுத்தப்படும்.

வடபகுதியில் பல கிராமங்களுக்கு ''உலக தரிசனம்'' புனர் நிர்மாண வேலைகளுக்கு நிதி வழங்கியுள்ள போதிலும் இதுவரையில் பூநகரிக்கிராமமே அதிகரித்த நிதிஉதவியைப் பெற வாய்ப்புப் பெற்றுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

## மாணவர் பிரிவு பொறுப்பாளர்

(கிளிநொச்சி)

விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் கிளிநொச்சி மாவட்ட மாணவர் பிரிவு பொறுப்பாளராக, கிளிநொச்சி நகர்ப் பொறுப்பாளராக கடமையாற்றிய திரு. நிமால் நியமிக்கப்பட்டுள்ளார்.

திரு. நிமால் கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளுக்குச் சென்று மாணவர் அவைகளை நிறுவியும் கருத்தரங்குகளை நடத்தியும் வருகிருர். (83)


## மோட்டார் சைக்கிள்கள் விற்பனை
( 100% RECONDITIONED MOTOR CYCLES )

ஹொண்டா (HONDA)
யமாஹா (YAMAHA)

ALL MODELS
CHALY/50 C C/70 C C/90 C C/125 C C/200 C C

நேரடியாக யப்பானில் இருந்து ஒவ்வொரு வாரமும் இறக்குமதி செய்யப்படுகின்றன.

ஈடன் என்டர்பிரைஸ்
( Eden Enterprises )
44, நீர்கொழும்பு வீதி, குருநாகல்.
தொலைபேசி எண்: 037 / 22470 (சி-3675)


# சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் பாரிய குறைபாடுகள்!

(மட்டுவில்)

தலை இல்லாத மனித உடல் எப்படி இயங்க முடியாதோ அதே நிலையில்தான் இன்று சாவகச்சேரி ஆஸ்பத்திரியும், ஒவ்வொரு துறையிலும் தலைமை இல்லாது இயக்கமின்றித் தேக்க நிலை அடைந்துள்ளது!

இந்த ஆஸ்பத்திரியைப் பொறுத்த மட்டில் கடந்த சுமார் ஒன்பது மாதங்களாக வைத்திய அதிகாரி இல்லை! ஆஸ்பத்திரி சிற்றூழியர்களை மேற்பார்வை செய்யும் 'ஓவர்சியர்' இல்லை. மருத்துவ தாதிமார்களின் தலைமையான 'மேற்ரன்' இல்லை.

ஆஸ்பத்திரி மருந்துகளின் தேவை உட்பட, சகல தேவைகளையும் உடனுக்குடன் மேலிடத்திற்கு அறிவித்து தட்டுப்பாடின்றி சேவையை மேற்கொள்ள ஒரு மருத்துவ அதிகாரி இல்லை.

சிற்றூழியர்களை அத்தியாவசிய தேவைக்கு ஏற்ப, அவர்களுக்கு கடமைகளை விளக்கி உடனுக்குடன் அவசியப்படும் அலுவல்களை செய்விப்பதற்கு மேற்பார்வையாளர் இல்லை.

கடந்த மூன்று மாதங்களுக்கான மருந்துகள் இன்னும் வந்து சேரவில்லை.

இதே நேரத்தில் நோயாளரின் தொகை தினம் தினம் அதிகரித்து வருகிறது. (82)

# ''மக்கள் ஒற்றுமை மூலம் எமது சக்தி பலப்படுத்தப்பட வேண்டும்''
## - தினேஷ்

(மட்டுவில்)

''பலம் பொருந்திய ஒரு தேசிய இனத்தின் பொறுப்புமிக்க பந்தோபஸ்துப் படையாக தமிழீழ விடுதலைப் புலிகள் இருக்கின்ருர்கள். தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைகளைப் பெற்றெடுக்கும் இந்த விடுதலைப் புலிகள் மீது இப்பொழுது வெளிநாடுகளின் பார்வை திரும்பியுள்ளது. இந்த உண்மையை உணர்ந்து எமது சக்தியை மக்கள் ஒற்றுமையாய் பலப்படுத்வேண்டும்,''

இவ்வாறு மட்டுவில்தெற்கு மோகனதாஸ் சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெற்ற ஒரு கருத்தரங்கில் உரை நிகழ்த்திய சாவகச்சேரி தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தென்மராட்சி பிரதேச அமைப்பாளர் திரு. ப. தினேஷ் கூறினுர். அவர் மேலும் கூறியதாவது:-

''தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் 18ஆண்டுகளாகஆயுதம் ஏந்திப் போராட்டங்களை நடத்தி வந்துள்ளது. இரகசிய வேலைத் திட்டங்களை வகுத்து நடத்திய அரசியல் போராட்டங்களுக்கு தமிழீழ மக்கள் பூரண ஆதரவை வழங்கியுள்ளனர். இதன் காரணமாக இது ஒரு மக்கள் போராட்டமாக நாம் முன்னெடுத்துச் சென்ருேம்.

''கடந்த சுமார் இரண்டரை வருடங்களாக மக்கள், நாங்கள்பட்ட துன்பங்களையும் இழப்புக்களையும் மறந்திருக்கமாட்டார்கள். பெரிய சோதனைக் காலமாக இருந்தும்கூட 'மக்கள், இந்திய இராணுவத்தினுடைய அடாவடித்தனங்களையும் பொருட்படுத்தாமல் எம்மை அன்புக்கரம் நீட்டி ஆதரித்தனர். உணவு, உறைவிடம் கொடுத்துதவினர்.

''இன்று ஒரு அமைதியான சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. இந்த அமைதிச் சூழ்நிலையில் நாம் பல திட்டங்களை முன்னெடுத்து இடைவெளியை நிரப்ப வேண்டும் இதற்கு இன்று மக்கள் எமக்குப் பேராதரவு கொடுக்கிருர்கள்.

''நாம் தமிழர் என்ற ஒரு தேசிய ஒருமைப்பாடு நிலைக்க வேண்டும். தேவையற்ற சமுக ஏற்றத்தாழ்வு, சாதி, மத பூசல்கள் ஒழிய வேண்டும். இந்த உண்மையை உணர்ந்து தெளிந்த பின்னரே எம்மை நாம் பூரணப்படுத்தவும், எமது சுயநிர்ணய உரிமைகளை மீட்டெடுக்கவும், அப்படி மீட்டெடுக்கும் பணியில் எமக்கு பூரண வெற்றியும் கிடைக்க முடியும்'' என்ருர். (82)

## சர்வோதய இயக்கம்

(புலோலி)

கிளிநொச்சி மாவட்ட சர்வோதய இயக்க அலுவலகம் கனகாம்பிகைக் குளத்திலுள்ள சர்வோதய பண்ணைக்கு மாற்றப்பட்டுள்ளது.

இவ்வலுவலகம் முன்னர் கரடிப்போக்கில் இயங்கி வந்தது.

சர்வோதய இயக்கத்தின் கிளிநொச்சி மாவட்ட இணைப்பளராக திரு.ப. தில்லைநாதன் நியமிக்கப்பட்டுள்ளார். (61

## ஹில்மனுக்கு அஞ்சலி

(மட்டுவில்)

மிருசுவில் பகுதியில் இந்திய இராணுவத்துடன் மோதி, பல ஆயுதங்களையும் கைப்பற்றி வீர மரணமடைந்த காப்டன் ஹில்மனின் முதலாவது அண்டு நினைவாக அவரின் உருவப்படம் திறந்துவைக்கப்படும்.

இம் மாதம் 16ம் திகதி மீசாலையில் காப்டன் ஹில்மனின் முதலாவது ஆண்டு நினைவஞ்சலியும், உருவப்படத் திறப்புவிழாவும் நடத்துவதற்கான ஒழுங்குகளை தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சிப் பிரதேசத்தினர் மேற்கொண்டுள்ளனர் (82)

## தராசு படிகளுக்கு முத்திரையிடல்

(உடுவில்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உடுவில் உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் தராசுபடிகளுக்கு முத்திரையிடும் வேலைகள் அண்மையில் நடைபெற்றன. உள்நாட்டு வர்த்தக திணைக்கள நிறுவன-அளவைகள் பிரிவு உத்தியோகத்தர்களா முத்திரையிடும் பணி மேற்கொள்ளப்பட்டது.

உடுவில், சுன்னுகம், மருதனுமடம் இவற்றை சூழ உள்ள வியாபாரிகள், கடைக்காரர்கள் பலரும் தமது தராசுப் படிகளை இங்குகொண்டு வந்து முத்திரையிட்டுக்கொண்டனர்,

தராசுப்படிகள், லீற்றர் மீற்றர் அளவைகள். தூக்குத் தராசுகள், மேடைத் தராசுகள் போன்ற பல நிறுவைச் சாதனங்களுக்கு முத்திரையிடப்பட்டது. (109]


## SLAS - இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சை - 1990

விரிவுரைகள் நுண்ணறிவை, பொது அறிவைத் தரா. சுயமான பயிற்சிகளே வெற்றியைத் தரும்.

அதற்கான பயிற்சி நூல்கள்:

1. பொது உளச்சார்பும் பொது அறிவும்
2. கிரகித்தல்
3. நுண்ணறிவு (20-5-90இல் வெளிவரும் இதற்கென ஆக்கப்பட்ட விசேட நூல்)

ஆக்கியோன்: க. குணராசா M. A., SLAS.

பிரபல புத்தகசாலைகளில் கிடைக்கும்:

★ ஸ்ரீலங்கா புத்தகசாலை — காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்

★ கமலம் பதிப்பகம் — 82, பிறவுன் வீதி, யாழ்ப்பாணம்.

(38 5)

# கிழக்கு ஐரோப்பாவில் அணு ஆயுதங்கள் எண்ணிக்கை குறைந்துவருகிறது!

[லண்டன்]

**கிழக்கு ஐரோப்பாவில் புரட்சிகரமான மாற்றங்கள் இடம்பெற்று வருவதனாலும், சோவியத் பாதுகாப்பு செலவினம் குறைக்கப்படக் கூடிய சாத்தியம் இருப்பதினாலும் அணு ஆயுதங்களை அதிக எண்ணிக்கையில் வைத்திருக்கவேண்டிய அவசியம் குறைந்து வருவதாக நேட்டோ ஸ்தாபனம் தெரிவித்துள்ளது.**

ஸ்தாபனத்தின் அணுவாயுதக் கொள்கைகள் சம்பந்தமாக மீளாய்வுசெய்த பின்னர் இரு நாள் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பங்குபற்றிய பாதுகாப்பு அமைச்சர்கள் இக்கருத்தை வெளியிட்டார்கள்.

சோவியத் யூனியன் அதன் அணு ஆயுதங்களைத் தொடர்ந்தும் நவீனப்படுத்திவருவதாகக் கூறிய அவர்கள் அந்த நாட்டின் அணுவாயுத எண்ணிக்கை குறைக்கப்படவேண்டுமென மாஸ்கோவிடம் வேண்டுகோள் விடுக்கவிருப்பதாகத் தெரிவித்தனர்.

## மாணவிகள் பயிற்சி

(உடுவில்)

யாழ்ப்பாணம் கல்வித் திணைக்கள முறைசாராக்கல்விப்பிரிவினரால் இணுவில் அமெரிக்கமிஷன் தமிழ்க்கலவன் பாடசாலையில் ஆடையமைத்தல் நெறிக்கான வகுப்பு கடந்த மாதம் 21ம் திகதி முதல் நடைபெற்று வருகின்றன. முப்பது மாணவிகள் இப்பயிற்சியில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

## இருவர் சுட்டுக் கொலை

(கொழும்பு)

சிகிரியாவிலுள்ள உல்லாச விடுதியில் கொள்ளையடித்தவர்களில் இருவர் அடர்ந்த காட்டுப் பகுதியில் வைத்து பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிகிரியாவிலிருந்து 14 மைல் தொலைவிலுள்ள காட்டுப் பகுதியில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

இக்கொள்ளையின் பின்னர் காட்டுக்குள் தப்பிச் சென்ற கொள்ளையர்களைத் தேடி, விமானப் படை, ராணுவம், பொலிஸ் பிரிவினர் தேடுதல் பணிகளையும், விசாரணைகளையும் நடத்தி வருவது தெரிந்ததே.

## பங்களாதேஷ் ஆட்சிமன்றத்திலிருந்து ஆறு பேர் நீக்கம்!

(டாக்கா)

பங்களாதேஷில் ஆளும் கட்சியின் ஆட்சிமன்றக் குழுவிலுள்ள ஆறு தலைவர்களை அரசுத் தலைவர் எர்ஷாத் நீக்கியுள்ளார்.

முன்னாள் துணைஜனாதிபதி, ஓய்வுபெற்ற நீதிபதி, மூன்று முன்னாள் அமைச்சர்கள் ஆகியோரே நீக்கப்பட்டதாகத் தெரிய வருகிறது.

ஆட்சிமன்றக் குழுவின் உறுப்பினர் எண்ணிக்கை 28ல் இருந்து 22 ஆகக் குறைக்கப்பட்டது என்ற அறிவிப்பைத் தவிர வேறு எந்த விளக்கமும் இது தொடர்பாக தெரிவிக்கப்படவில்லை.

## இராசி பலன்

12 - 5 - 1990

சனிக்கிழமை

மேடம்: மனோதிடம், கலகலப்பு, உடல்உபாதை.

இடபம்: குறைசொல்லல், பொய்பேசுதல், சமூகசேவை.

மிதுனம்: தந்தை வழி உதவி, சகோதரருக்கு உதவுதல், ஆலயதரிசனம்.

கடகம்: நீசர் நட்பு, பிரச்சனை, சமூகசேவை, செலவு.

சிங்கம்: இடாம்பீகம், தொழில் சிறப்பு, பெரியோர் உதவி.

கன்னி: பணவரவு, தூரத்துச் செய்தி, சமாதானம்.

துலாம்: சாஸ்திர விருப்பு, பொருள் வரவு, ஸ்திரீ சுகம்.

விருச்சிகம்: தொழில் சிறப்பு, காரிய தாமதம், வைராக்கியம்.

தனுசு: கௌரவம், தேகபீடை, உற்சாகம்.

மகரம்: வசீகரம், தந்திரப் போக்கு, கடினவாக்கு.

கும்பம்: பொய் பேசுதல், உழைப்பு, தீவிர சிந்தை

மீனம்: சமாதானம், உதவிகள், செலவு, ஆலய தரினம்.

இ. மகாதேவா

## ஆந்திரா புயலில் 96 பேர் மரணம் 15 லட்சம் பேர் பாதிப்பு!

(ஹைதராபாத்)

ஆந்திர பிரதேசத்தில் வீசிய புயல் காரணமாக இறந்தோரின் எண்ணிக்கை 96ஆக அதிகரித்துள்ளது.

இந்தப் புயலினால் 15 லட்சம் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

புயல் வீசிய பகுதிகளில் உதவி மீட்பு பணிகள் நடைபெற்றுவருகின்றது. இராணுவ வீரர்களும், விமானங்களும் இந்தப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

## தென் கொரியாவில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் பொலிஸ் கண்ணீர் பிரயோகம்

(சியோல்)

தென் கொரியாவில் ஆர்ப்பாட்டம் செய்த சுமார் இரண்டாயிரம் மாணவர்களைக் கலைப்பதற்கு பொலிஸார் கண்ணீர்ப் புகைப்பிரயோகத்தினை மேற்கொண்டனர்.

தென்கொரிய அரசாங்கத்தின் எச்சரிக்கையையும் மீறி மாணவர்களும் அதிருப்தியாளர்களும் சியோலில் மேலும் பல அரச எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை நடத்தினார்கள். ஆர்ப்பாட்டத்தின்போது கற்களும், எரியும் தீப்பந்தங்களும் வீசப்பட்டன.

இதற்கிடையே இங்குள்ள பல்கலைக்கழக வழாகங்களில் மோதல்கள் நடைபெற்றதாகவும் அறிவிக்கப்பட்டது. (து)

## விமானம் விழுந்து 21 பேர் பலி!

(மெக்ஸிக்கோ]

மெக்ஸிக்கோ நகருக்கு வெளியேயுள்ள வயல்வெளி ஒன்றில் இரட்டை என்ஜின் பொருத்தப்பட்ட விமானம் ஒன்று வீழ்ந்து நொருங்கியதில் 21 பேர் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

பரிசுத்த பாப்பரசரைச் சந்திப்பதற்காக இவ்விமானத்தில் சென்ற மேற்றிராணியார் ஒருவரும் கொல்லப்பட்டார்.

## பாகிஸ்தானில் கட்டாய இராணுவப் பயிற்சி அடுத்த ஆண்டு முதல் அமுல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானிலுள்ள அனைத்து மக்களுக்கும் அடுத்த ஆண்டு தொடக்கம் கட்டாய இராணுவப் பயிற்சி வழங்கப்படவுள்ளது.

இந்த இராணுவப் பயிற்சிக்கான திட்டம் பற்றி பாகிஸ்தான் அரசு தற்போது ஆராய்துவருகிறது.

இத்தகைய பயிற்சியினால் பாகிஸ்தானின் பாதுகாப்புச் செலவினம் குறைக்கப்படமாட்டாது என்றும் தெரிய வருகிறது.

இது இவ்வாறிருக்க அணு ஆயுத பரவல் தடுப்பு ஒப்பந்தத்தில் பாகிஸ்தான் கையெழுத்திடாவிட்டால் அணுசக்தி துறையில் அதற்கு உதவப்போவதில்லை என்று கனடா தெரிவித்துள்ளது.

## 25 யுவதிகளுக்கு இந்தியாவில் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனமும், பனை அபிவிருத்திச் சபையும் இணைந்து நடத்தும் பயிற்சித் திட்டத்தின் கீழ் உழைக்கும் மகளிர் அபிவிருத்தி நிறுவன அமைப்பாளர்கள், மேற்பார்வையாளர்களுக்கான பயிற்சி நெறிக்குத் தெரிவான இரண்டாவது குழு இம்மாத இறுதியில் இந்தியாவுக்கு விஜயம் செய்யும். பயிற்சிக்குச் செல்லும் இரண்டாவது குழுவில் 25 யுவதிகள் செல்லவிருக்கின்றனர்.

இப்பயிற்சித் திட்டத்தின் கீழ் இந்தியாவுக்குச் சென்ற முதலாவது குழுவைச் சேர்ந்த 25 பேர் சென்ற மாதம் 22ந் திகதி நாடு திரும்பியுள்ளனர். இவர்களுக்கான பயிற்சிச் சான்றிதழ்களை பெருந்தோட்டக் கைத்தொழில் ராஜாங்க அமைச்சர் ஜனப் அபுசாலி கடந்த 25ந் திகதி கொழும்பில் வழங்கினார். (123)

## ஜனாதிபதி முபாரக் சோவியத் விஜயம்

(கெய்ரோ)

எகிப்திய ஜனாதிபதி ஜனப் முபாரக் 18 ஆண்டுகள் இடைவெளிக்குப் பின்னர் சோவியத் யூனியனுக்கு உத்தியோக விஜயம் ஒன்றை மேற்கொண்டு அங்கு செல்லவிருக்கிறார்.

நீண்டகால இடைவெளிக்குப்பின்னர் முதல் தடவையாக அங்கு செல்லும் ஜனப் முபாரக், சீனா, வடகொரியா நாடுகளுக்கும் விஜயம் செய்யவுள்ளார். (அ)

## யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் கைத்தொழில் பயிற்சி நிலையங்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். செஞ்சிலுவைச் சங்கம் இவ்வருடம் 10 கைத்தொழிற் பயிற்சி நிலையங்களை யாழ். குடாநாட்டில் நடத்தவிருக்கிறது. ஒவ்வொரு பயிற்சி நிலையத்திலும் 30 யுவதிகளுக்கு உற்பத்திப் பயிற்சி வழங்குவதற்கும், தொழிற் செய்கைக்கான பயிற்சிப் படியும், ஊக்குவிப்புப் படியும் வழங்குவதற்கும் இச்சங்கம் நிதி ஒதுக்கியுள்ளது.

இதன் முதலாவது பயிற்சி நிலையம், இம்மாதம் 2ம் திகதி மண்டைதீவுக் கிராமத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. (123)

## பயிர்ச் செய்கை வளர்ச்சி: 12 நீர்ப்பாசனத் திட்டங்கள்

(கொழும்பு)

வடமேல் மாகாணத்தின் பயிர்ச்செய்கை வளர்ச்சிக்காக 12 நீர்பாசனத்திட்டங்கள் 24 கோடியே 50 லட்சம் ரூபா செலவில் ஆரம்பிக்கப்படவுள்ளன என்று காணி நீர்ப்பாசன மகாவலி அமைச்சு அறிவித்துள்ளது.

இத்திட்டத்தின் பயனாக 4142 குடும்பங்கள் பயனடையவிருப்பதாகவும், இத்திட்டங்கள் இவ்வாண்டு முதல் ஆரம்பமாகி ஐந்து ஆண்டுகால எல்லைக்குள் பூர்த்தி செய்யப்படும் என்றும் அமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## நேபாளத்தில் உண்ணாவிரதத்திற்கு ஆதரவாக ஆசிரியர்கள் வேலைநிறுத்தம்!

(காட்மண்டு)

நேபாளத்திலுள்ள இருபதுக்கும் அதிகமான பாடசாலைகளில் பணியாற்றும் ஆசிரியர்கள், உண்ணாவிரதமிருக்கும் ஏழு ஆசிரியர்களுக்கு ஆதரவாக வேலை நிறுத்தத்தில் குதித்துள்ளனர்.

மன்னர் பிரேந்திரா அவர்கள் நியமித்த பல்கலைக்கழக அதிகாரிகளை வேலை நீக்கம் செய்யக்கோரி அவர்கள் இந்தப் போராட்டத்தில் இறங்கியுள்ளார்கள்,

துணைவேந்தரையும் ஏனைய அதிகாரிகளையும் நியமிக்க மன்னருக்குள்ள அதிகாரத்தைத் தட்டிக்கேட்கும் வகையில் இது இருப்பதாக அவதாகள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

## பனம் தும்புத் தொழிற்சாலை புனரமைக்க நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

அமைதிப் படை தேடுதல் நடவடிக்கையின்போது தலைமன்னாரில் தீக்கிரையான பனம் தும்புத் தொழிற்சாலையைப் புனரமைப்பதற்கென மன்னார் மாவட்ட பன்முகப்படுத்

(6-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

நம் அறியாமையை உணர்வதே அறிவை எய்துவ தற்கு முதற்படி,

— ஆன்ரேர் வாக்கு.

# விண்வெளியில் நடப்பது எளிதான காரியமல்ல!

மிர் விண்வெளி நிலையத்தில் எட்டு மாதங்கள் தங்கியிருந்து பணிபுரிந்த சோவியத் மருத்துவர் பாலியகோவ். ஏ பி என் நிருபருக்கு அளித்த பேட்டியில் மேற்கண்டவாறு கருத்து தெரிவித்துள்ளார். அவருக்கு வயது 47. அவர் 1989 மார்ச்சில் விண்வெளிப் பயணத்தை முடித்துக் கொண்டு பூமிக்குத் திரும்பி வந்தார். அவர் இப்போது சோவியத் யூனியனில் உள்ள முன்னணி விண்வெளி மருத்துவ மையத்தில் உயிரியல் மருத்துப் பிரச்சினைகளுக்கான கழகத்தின் துணை இயக்குனராகப் பணியாற்றுகிறார்.

டாக்டர் பாலியகோவ் அவர்களே, அண்மையில் அலெக்சாந்தர் வித்த றென்கோணம் அலெக்சாந்தர் செரிப்ரோவும் இரண்டாவது தடவையாக (ஐந்து முறை நடப்பதற்குத் திட்டமிடப்பட்டது) விண்வெளியில் நடந்தனர் அல்லவா! அச்சமயத்தில் அவர்களின் விண்வெளி உடையிலிருந்து பூமியிலுள்ள உங்கள் கழகத்திற்கு வந்து சேரும் மருத்துவத் தகவல்களை சேகரிக்கும் கூடத்தில் நானிருந்தேன். அப்போது உங்கள் கழக அலுவலக ஊழியர்களின் முகங்களில் பலவிதமான கவலைக்குறி தோன்றி மறைவதைக்கண்டேன் ஆனால் சோவியத்விண்வெளி வீரர்கவ் 200மணி நேரம் விண்கலம் சாராத நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். இவை வழக்கமான நடவடிக்கைகளாகமாறி விட்டன அல்லவா?

அவ்வாறு சொல்லமுடியாது அலெக்சாந்தர் வோல்கோவும் சக பிரெஞ்சு விண்வெளி வீரருமான ஜியான்-லூப் செரிட்டியனும் ஆறுமணி நேரம் விண்வெளியில் நடந்துவிட்டு, விண்வெளி நிலையத்திற்குத் திரும்பும் வேளையில் மிகவும் களைத்துப்போய் காணப்பட்டனர். டாக்டர் என்றமுறையில் நான் விண்வெளி நிலையத்திற்குள் இருந்தேன். விண்வெளியில் நடந்துவிட்டு திரும்பும் வேளையில் அவர்களின் இருதயத் துடிப்பு மிக அதிகமாய் இருந்ததைக்கண்டறிந்தேன். அவர்களின் கடும் உழைப்பு முயற்சியின் விளைவே அது. விண்கலத்துக்கு வெளியே அதாவது விண்கலம் சாராத பணிகளில் ஈடுபடுவது மிகவும் ஆபத்தானது என்று உறுதியாகக் கூற முடியும்.

இத்னைப் பூமியிலுள்ளவர்கள் புரிந்து கொள்வது கடினந்தான். அவர்களைச்சுற்றிஎல்லையற்ற விண்வெளி சூழ்ந்திருப்பதால் அவர்களுக்கு ஏற்படும் மன உளைச்சல் புரிந்துகொள்ளக்கூடியதே. ஆனால் உடல் சோர்வும், களைப்பும் ஏற்படுவதற்கு என்ன காரணம்?

எடையற்ற நிலையில் விண்வெளியில் நடப்பது எளிதாக தோன்றுகிறதே, பிறகு ஏனிந்தக் களைப்பு?

பூமியில் மனிதன் நடக்கும்போது சில சமயம் இடறிவிழுகிறான்; அதற்கு காரணம் இன்னதென்றும் தெரிந்து கொள்கிறான். ஆனால் விண்வெளியில் எதிர்பாராது மோதும் பொருள்கள் உயிருக்கே ஆபத்தை ஏற்படுத்தி விடலாம். செரிட்டியனும் வோல்கோவும் விண்கலம் சாராத நடவடிக்கையில் ஈடுபட்டதை ஓர் உதாரணமாக எடுத்துக்கொள்வோம். பிரான்சில் தயாரிக்கப்பட்ட, தானே திறந்துகொள்ளும் சாதனத்தை அவர்கள் விண்வெளி நிலையத்தின் வெளியே அதன் மேற்பரப்பில் பொருத்தினர். பின்னர் வோல்கோவ் அதை உதைத்துப்பார்த்தார். அச்சாதனம் திறந்துகொள்ளவில்லை. இம்முயற்சியானது உடற்சோர்வை ஏற்படுத்தக்கூடியது. மேலும் உதைத்துப் பார்க்கும் வேளையில் கால் படாமற்போய்விட்டாலோ சாதனத்தின் மூலப்பகுதியில் விண்வெளி ஆடை சிக்கிக் கொண்டாலோ என்ன நேரும் என்ற எண்ணம் தோன்றி விட்டால் உடனடியாக விபரீதமான விளைவு ஏற்படுவது திண்ணம்.

விண்கலத்திலிருந்த கடிகாரத்தை நான் தொடர்ந்து கவனித்துக்கொண்டிருந்தேன், எனக்கு வேர்த்துக் கொட்டியது. அவர்களது விண்வெளி உடையில் இணைக்கப்பட்டிருந்த ஆக்ஸிஜன் சேமிப்பு குறைந்துகொண்டே வந்ததை அக்கடிகாரமுள் எடுத்துக்காட்டியது. விண்கலத்திற்குள் இருந்தபடி நான் அவர்களுக்கு உதவிசெய்ய முடியவில்லை. வோல்கோவின் சேமிப்பில் மிச்சமிருந்தது. அவர் தமது சகாவுக்கு உதவிக்கரம் நீட்டினார். 20 மீட்டர் தூரத்தில் அவர் செயல்படுவதற்கு 50 நிமிடங்கள் ஆயிற்று.

அவர்கள், பெரிதும் களைத்துச் சோர்ந்து விண்கலத்திற்குத் திரும்பினர். விண்கலத்துக்கு வெளியே எவ்வளவு நிமிடங்கள் செலவழித்துள்ளனர் என்பது மட்டுமே முக்கியமல்ல; அவர்களது கடமைப் பொறுப்பின் பாரம் மிகப்பெரியது என்பதை எமது கழக நிபுணர்களின் பகுப்பாய்வு எடுத்துக்காட்டியது. மூசாமனரோவும் விளத்மிர் டிட்டோவும் 5 மணி நேரம் விண்வெளியில் நடந்து முடித்தபோது நான் சோவியத் நிபுணர்கள், விண்வெளி விஞ்ஞானம், தொழில் நுட்பவியலில் அடிப்படையிலேயே புதிய நடவடிக்கையை மேற்கொள்ளத் தயாரிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர். மூன்றுவது தடவையாக விண்வெளியில் (ஜனவரி 26) விக்தரெங்கோவும், செரிப்ரோவும் நடந்தனர். இது அந்தப் புதிய நடவடிக்கைக்குக் கட்டியம் கூறியது எனலாப். முதலாவதாக, ஒரு புதிய வகை விண்வெளி ஆடையை வெற்றிகரமாகப் பரிசோதித்துப் பார்த்துள்ளனர். அதில் மின்சார வழங்கல் அமைப்பு, தூர அளவைச் சாதனம், ரேடியோ தகவல் தொடர்பு உட்படப் பல நவீன தொழில்நுட்ப வசதிகள் இருக்கும். இதன் மூலம் எட்டு மணி நேரம் பணியாற்ற முடியும்.

புதிதாக வந்து சேர்ந்துள்ள குவாந்த்-2எனும் விண்வெளிக் கூட்டின் லாக்சேம்பரில் பறக்க ஆரம்பிக்கும் தளம் ஒன்றை சோவியத் நிபுணர்கள் தயாரித்துள்ளனர். பெப்ரவரி 1, 6 தேதிகளில் அவர்கள் முதல் தடவையாக விண்வெளிநிலையத்தைச் சுற்றி விமானமோட்டார்சைக்கிளில் பறந்தனர்.

தொழில்நுட்ப வார்த்தைகளில் இச்சாதனத்தை மனிதன் கையாளும் பிரிவு (எம் எம்யூ) எனலாம். இது 'எச்' என்ற ஆங்கில எழுத்து வடிவிலான கட்டுக்கோப்பைக் கொண்டிருக்கும். இதிலுள்ள மேடையில் விண்வெளி வீரர் நிற்க முடியும். அவரது இடுப்பளவுக்குச் சமமான மட்டத்தில் குறுக்கே செல்லும் விளிம்பின் மூலம் அவர் எம்எம்யூவுடன் இணைக்கப்பட்டிருப்பார். இந்த எம்எம்யூவை அவர் தம் கையாலேயே இயக்கலாம் அல்லது தானியங்கி எந்திர விமானியிடம் ஒப்படைத்துவிடலாம். இதில்பயன்படுத்தப்படும் வாயு, ஒரு ஜெட் விமானம் பறப்பது போன்ற விளைவை உண்டாக்கும்.

இந்த எம்எம்யூவைப் பயன்படுத்தி பூமிக்கு அருகிலுள்ள விண்வெளியில் மக்கள் இயங்க முடியும். எதிர்காலத்தில் அத்தகைய விமான மோட்டார் சைக்கிள்களின் மூலம் திங்கள் விண்வெளிக்கு அருகில் அல்லது செவ்வாய் விண்வெளிக்கு அருகில் செயல்படமுடியுமா? இது அற்புதமானது. அபாயமானதும்கூட.

ஏன்? அவர்களுக்கு கடுமையான மன உளைச்சல் ஏற்பட்டிருந்தது. அவர்கள் நிலையத்தோடு இணைக்கப்பட்ட குவாந்த் விண்கலகக் கூட்டை வந்தடைந்தனர். சர்வதேச உடன்படிக்கையின் படி பொருத்தப்பட்டிருந்த டச்சு தொலை நோக்கியைப் பழுது பார்த்தனர். ஆனால் இதனை நேரடியாகச் செய்ய முடியவில்லை. ஒரு முக்கிய கட்டத்தில் பழுது பார்க்கும் கருவி உடைந்து விட்டது. எனவே அப்பணியை கைகளாலேயே செய்து முடிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இதனால் மிகக் கடுமையாக களைத்துப் போயினர். பழுது பார்த்தாகி விட்டது. இனி திரும்பி வர வேண்டுமே. அவர்கள் தங்களது பிடிமான பலத்தையும்

(6-ம் பக்கம் பார்க்க)

# நமது நோக்கு

## பதற்றநிலை வேண்டாம்-பேசித் தீருங்களேன்...!

"இரகசிய ஒப்பந்தங்கள் எதுவுமில்லை; ஒப்பந்தங்கள் ஏதும் ஏற்படும்போது, அதற்கு முன்பாக அவை பற்றி மக்கள் முன் பகிரங்கப்படுத்தப்படும்; இது பற்றி மக்களின் பூரண கருத்துக்களும் அறியப்படும்!''- இவ்வாறு விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிச் செயலாளர் திரு. யோகரத்தினம் யோகி தெரிவித்திருக்கிறார்,

சென்ற பல ஆண்டுகளாகத் தமிழர்களின் உரிமைகள் திட்டமிட்டுப் பறிக்கப்பட்டுள்ளன: அவர்களின் பாரம்பரியப் பிரதேசத்தில் திட்டமிட்ட குடியேற்றங்கள் நடந்தன.

உரிமைகளைப் பறிக்கும் சட்டங்கள் வந்தபோதெல்லாம் பெருப்பான்மையினர் ஒன்றுதிரண்டு வாக்களித்து வந்தனர்.

இனக்கலவரங்களால் பாதிக்கப்பட்டபோதெல்லாம், அனுதாப வார்த்தைகள் கூட அங்கிருந்து வரவில்லை.

ஆனால், பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சனைகளைத் தீர்க்க ஒருபகுதியினர் முற்பட்டபோதெல்லாம், ஒத்துழைப்புத்தான் வேண்டாம், சற்று ஒதுங்கியாயினும் இருக்கவேண்டாமோ?

சும்மா இருந்த சங்கை ஊதிக் கெடுத்தானும் ஆண்டி!

இரகசிய ஒப்பந்தங்கள் என்ற பூச்சாண்டி காட்டி மக்களைக் குழப்பியடித்து அரசியல் இலாபம் தேடும் முயற்சி சர்வசாதாரணமாகிவிட்டது.

சிங்களப் மெரும்பான்மை இனத்தவரிடையே இனவாதத்தைத் தூவிப் பொதுத்தேர்தலில் வாக்குசுள் பெற்றுவிடலாமென்பதிலேயே கவனம் செல்கின்றது.

இனப்பிரச்சனைத் தீர்வுக்கு ஆக்க பூர்வமான வழிமுறைகளைக் கூறவேண்டுமென்பதில் கவனம் செல்வதாகத் தெரியவில்லை.

இரகசிய ஒப்பந்தங்கள் எதுவுமே இல்லை எனத் தமிழர்கள் சார்பில் மறுப்புத் தெரிவிக்கப்பட்டதை ஏற்றுக் கொண்டு, இனப் பிரச்சனைத் தீர்வுக்கான வழிவகைகளைக் காண முயற்சி எடுக்க வேண்டும்.

அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கொழும்பிலிருந்து வரும் ஆங்கிலத் தினசரிப் பத்திரிகைக்குப் பேட்டியளித்திருக்கிறார்; எதிர்க்கட்சியினரின் திட்டமிட்ட பிரசாரத்தைச் சாடியிருக்கிறார்:

''வீணான பதற்ற நிலையைத் தோற்றுவித்து தற்போதைய நிலைமையை மோசமாக்கிவிட அவர்கள் முனைகிறார்கள் போல் தோன்றுகின்றது!''- என அவர் அப்பேட்டியிற் கூறியிருக்கிறார்.

ஏற்கனவே நாடு பல தொல்லைகளுக்கு உள்ளாகி விட்டது.

உயிர்ச் சேதமும் பொருட்சேதமும் ஏற்பட்டு, மக்கள் மீட்சிக்கு வழிகாண ஏங்கியிருக்கிறார்கள்.

பொருளாதரத்தைக் கட்டிஎழுப்ப வெளிநாட்டு உதவிகள் போதாத நிலை உருவாகி விட்டது.

அமைதிநிலை தொடர்ந்தால்தான் உதவிகள் வருவதும் தொடரும் என்ற எச்சரிக்கைகள் வந்த வண்ணமுள்ளன.

இந்த நிலையில் அமைதியைக் குழப்பிவிட முயற்சிப்பது வேதனைக்குரியதாகும்!

## தொல்லை தரும் ஆலைகள்

# மக்கள் கருத்து

ஏராளமான விவசாய நிலங்களையும், குடியிருப்புகளையும் கொண்ட கோப்பாய்க் கிராமம் கல்லுடைக்கும் ஆலைகளினால் படும் தொல்லைகள் எண்ணிலடங்கா. சூழல் மாசுபடுவது மட்டுமன்றி அவ்வீதியால் (இராச வீதியால்) செல்லும் மக்கள் பல கஷ்டங்களை அனுபவிக்கின்றார்கள். இதனால் விபத்துகளும் ஏற்படுகின்றன. அப்பிரதேச வீட்டுக்கூரைகள் உட்பட சகல பயிர்களிலும் இக்கல்லுடைக்கும் ஆலைகளில் இருந்து வெளிப்படும் தூசி படிந்துள்ளது. இதனால் பயிர் வளர்ச்சி பெரும் பாதிப்பு அடைந்து விவசாயிகள் நட்டமடைவதால் அப்பிரதேச விவசாயிகள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். வாழ்க்கைச் செலவுக்கே பணம் இன்றிக் கஷ்டப்படுகின்றார்கள்,

இப்பிரதேச மககளும் ஏனையோரும் சுகாதார ரீதியாக இவ்வாலைகளிலிருந்து வெளிவரும் தூசிகளினால் பல பாதிப்புகளை எதிர்நோக்குகின்றார்கள். குறிப்பாக தொய்வு, சுவாசப்பை அழற்சி, கசம். இழுப்பு, முட்டு போன்ற பல்வேறு மயங்கர கொடிய நோய்கள் ஏற்படுகின்றன. சின்னஞ்சிறிய குழந்தைகளும் பல பாதிப்புகளை எதிர்நோக்குகின்றனர்.

இக் கைத்தொழில்களிற்குத் தேவையான மூலப்பொருள்கள் இப்பிரதேசத்தில் கிடைக்கக்கூடியது என்றாலும் பரவாயில்லை. இவை இப்பிரதேசத்தில் இருப்பது ஓரளவு நியாயம்தான். ஆனால் மூலப் பொருள்கள் கூட பல மைல்களுக்கு அப்பால் இருந்து கொண்டு வரப்படுகின்றன. கற்கள் கட்டடத் தேவைக்கு முக்கியமாக இருப்பதால், மக்கள் ஆலைகள் இருக்குமிடம் சென்று வாங்குவார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் ஆலைகளின் ரீதியில் உரிமையாளர்களோ அல்லது தொழிலாளர்களோ தொழில் வாய்ப்பு எவ்விதத்திலும் பாதிப்படையமாட்டார்கள் என்பது வெளிப்படை. இப்பிரதேச மக்களும் ஏனையோரும் சகல வழிகளிலும் சொல்லொணாத் துயரங்களை அனுபவிக்கிறார்கள்.

—ரவி,
கோப்பாய்.

# பலதும் பத்தும்

### அவனுக்கு இளகிய மனசு!

அவன் ஏந்திய ஆயுதம் இரும்பாலானது; ஆனால்... அவன் இதயமோ ... இரும்பல்ல ; இளகியது...!

மக்கள் வேதனை கண்டு உள்ளம் உருகியது. இடம் பெயர்ந்த மக்களுக்கு ஆறுதல் அளிக்க முகாம்கள் அமைத்தவன்.

உழைப்பின் பெருமையை உணர்ந்தவன்; அதனாற் பண்ணைகளை நிறுவி தொழில் வாய்ப்புகளை ஏற்படுத்தியவன்.

பொருட்களுக்கு அநியாய விலையா......? பொதுமக்கள் பாதிப்பா ...? உடனே நியாய விலைக்கடைகளைத் திறந்திருக்கிறான்.

ஏழைச்சிறாரின் கல்விக் கண் திறக்க ... அவன் செய்த ஏற்பாடு...?

நூல் நிலையங்கள் ... பாலர் பாடசாலைகள் ... இலவச வகுப்புகள் ... மதிய உணவு ... !

கசிப்பு ஒழிப்பா ...? நாடகமூலமே பிரசாரம்...! இப்படிப் பலப்பல.

யாரிவன் ... ? மக்களைக் காந்தமெனக் கவர்ந்த சீறீ காந்தனே ... அக்காச்சியே!

வாணி

# கடவுசீட்டு விண்ணப்பத்துடன்

## போலி பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்!

(மானிப்பாய்)

கடவுச்சீட்டு விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட பிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் போலியானவையெனக் கண்டு பிடிக்கப்பட்டுத்திருப்பி அனுப்பப்பட்டுள்ளன.

இச்சம்பவம் யாழ். கடவுச்சீட்டு அலுவலகத்தில் இடம் பெற்றுள்ளது.

கடந்த வாரம் யாழ். கடவுச்சீட்டு அலுவலகத்தில் கடவுச்சீட்டு விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்கப்பட்ட சிலபிறப்பு அத்தாட்சிப் பத்திரங்கள் மீது சந்தேகம் கொண்ட உத்தியோகத்தர்கள் அவற்றை யாழ். பிறப்பு, இறப்பு பதிவுகாரர் அலுவலகத்தில் உள்ள மூலப் பிரதியுடன் ஒப்பிட்டுப் பார்த்தபோது அவை போலியானவையெனக் கண்டுபிடிக்கப்பட்டது.

''பிறப்புப் பதிவு இல்லை என்று காணப்படடால் பிறப்புப் பதிவாளர் அலுவலகத்துக்கு விண்ணப்பித்து, அங்கு உங்கள் பதிவு இல்லையென அவர்களால் அனுப்பிவைக்கப்பட்ட கடிதத்துடன், சமாதான நீதவானின் கடிதம், பாடசாலை விடுகைச் சான்றிதழ், கிராமசேவையாளரின் கடிதம், உங்கள் சகோதரரின் பிறப்புப் பத்திரம், நீங்கள் திருமணமானவராயின் உங்கள் திருமணச் சான்றிதழ், வாக்காளர் அட்டவணை இடாப்பு ஆகியவற்றை சமர்ப்பித்தால் உங்களுக்கு உரிய முறையில் கடவுச்சீட்டு வழங்கப்படும்'' என்று யாழ். கடவுச்சீட்டு உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (71)

# இந்து இளைஞர் கொடிதினம் ஜூலையில் கொண்டாடப்படும்

(யாழ்ப்பாணம்)

இந்து இளைஞர் கொடித் தினத்தை ஜூலை மாத நடுப் பகுதியில் கொண்டாடுவதென வும், கொடித் தினத்தின் போது கொடி விற்பனையை மேற்கொள்வது எனவும் இலங்கை இந்து இளைஞர் பேரவை முடிவுசெய்துள்ளது.

இது தொடர்பான சுற்று நிருபம், நாடு பூராவுமுள்ள இந்து இளைஞர் மன்றங்களுக்கும் அனுப்பிவைப்பதெனவும் முடிவுசெய்யப்பட்டுள்ளது.

அண்மையில் கிளிநொச்சியில் நடைபெற்ற இலங்கை இந்து இளைஞர் பேரவையின் விசேட செயற்குழுக் கூட்டத்தில் இதுவிடயம் எடுக்கப்பட்டது. இந்து இளைஞர் மன்றத்தின் கொழும்புக் கிளையை இம்மாத இறுதியில் கூட்ட நடவடிக்கை எடுப்பதெனவும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (123)

## இன்று நிவாரணம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தில் கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இன்று சனிக்கிழமை நிவாரணப்பணம் வழங்கப்படவுள்ளது.

இதுவரை நிவாரணம் பெறுதோர் இப்பணத்தைப்பெற கண்டாவளை உதவி அரசாங்க அதிபர் திரு. தனபாலசிங்கம் நடவடிக்கை எடுத்துள்ளார். (83)

## பண்ணிசைப் போட்டி

(உடுவில்)

மாணவர்களிடையே சமய அறிவை ஊக்குவிக்கும் முகமாக இணுவில் பரராசசேகரப் பிள்ளையார் ஆலயம் சார்பாக இம்மாதம் 22-ம் திகதி பண்ணிசைப் போட்டியொன்று நடாத்தப்பட உள்ளது.

ஸ்ரீ பரராசசேகரப் பிள்ளையார் ஆலய 31 வது ஆண்டு மஹோற்சவத்தை முன்னிட்டு இப் போட்டி நடைபெறுகிறது. கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு என்று மூன்று பிரிவுகளாக நடைபெற உள்ள இப்போட்டியில் வெற்றியீட்டுபவர்களுக்கு தங்கப்பதக்கமும், பரிசுகளும், சான்றிதழ்களும் வழங்கப்பட உள்ளன. (109)

## கோப்பாய் லயன்ஸ் கழகத்திற்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திற்கு அண்மையில் விஜயம் செய்த மாவட்ட ஆளுநர் லயன்பிரேமச்சந்திர பத்திரன கோப்பாய் லயன்ஸ் கழகம் புனர்வாழ்வு நடவடிக்கைகளில் அதிக கவனம் செலுத்திச் செயற்பட்டதைப் பார்வையிட்டு பாராட்டுத் தெரிவித்தார்.

சர்வமதச ரீதியில் புரிந்துணர்வை ஏற்படுத்தி நிதி உதவிகளைப் பெறுவதிலும், இக் கழகத்தின் பணி சிறப்பாக உள்ளதைத் தாம் உணர்ந்து மகிழ்வதாகவும் அவர் தெரிவித்தார்.

கஷ்டப் .பிரதேசத்தைச் சேர்ந்த ஒரு கழகமாக இருந்த போதும் பாரிய பணிகளில் இக் கழகம் முன்னணியில் திகழ்வது உறுப்பினர்களது சேவை உணர்வையும், முயற்சிகளையும் எடுத்துக்காட்டுகின்றது என்றும் திரு. பத்திரன தெரிவித்தார். (123)

# "கருத்தோவியங்கள் மூலம் எம்மைத் திசைதிருப்பினர்"

## நூல் வெளியீட்டு விழாவில் 'சுந்தரு'க்கு பாராட்டு

(யாழ்ப்பாணம்)

''சுந்தர் தமது கருத்தோவியங்கள் மூலம் புதிய கோணத்தில் எம்மைத் திசை திருப்பி எமது மனச்சாட்சியை தட்டி எழுப்பினர்.''

இவ்வாறு நேற்று முன்தினம் நல்லை ஆதீனத்தில் நடைபெற்ற 'சிரித்திரன் சித்திரக் கொத்து' நூல் வெளியீட்டு விழாவில் அருட்திரு. ஜெராட் சவிரிமுத்து உரையாற்றுகையில் தெரிவித்தார்.

''சிரித்திரன் சஞ்சிகை ஆசிரியர் சுந்தர் தமது உள்ளத்தில் தேங்கிக் கிடந்த மனித நேயத்தையும் ஜீவகாருண்யத்தையும் தமது கருத்தோவியங்கள் மூலம் எடுத்துக்காட்டினார். சமுதாயத்தின் சீர்கேடுகள் மற்றும் போலித்தன்மைகளையும் எடுத்துக்காட்டினார். அவர் சிறந்த படைப்பாளி மட்டுமல்ல அத்துடன் பல படைப்பாளிகளையும் உருவாக்கியுள்ளார். படைப்பதனால் நான் என்ற அகந்தை அழியும் என்ற கொள்கை உடையவர் சுந்தர் என்றும் அவர் கூறினார்.

### ஈழத்தின் கருத்தோவிய நூல்

''சிரித்திரன் சஞ்சிகை ஆசிரியர் சுந்தர், சிரித்திரன் ஊடாக நகைச்சுவையோடு, காத்திரமான படைப்புகளையும் தந்துள்ளார் என்று 'சிரித்திரன் சித்திரக் கொத்து' நூல் வெளியீட்டுவிழாவில் திரு. பொன். பூலோகசிங்கம் தலைமை வகித்து உரையாற்றுகையில் தெரிவித்தார்.

''சுந்தரின் கருத்தோவியங்கள் அமைந்த நூல், ஈழத்தில் தமிழில் வெளிவந்த முதல் கருத்தோவிய நூல் ஆகும். இலங்கை பத்திரிகைகளிலும் சுந்தர் கருத்தோவியங்களை படைத்துள்ளார். சுந்தர் தாம் படைத்த பாத்திரங்கள் வழியாக சமூக சீர்கேடுகளை மக்களுக்கு எடுத்துச் சொன்னர். சிரித்திரன் பாத்திரங்களின் சுவையை வாசகர் கண்டனர்.'' (153)

# கால்நடைகளுக்கு நோய்த்தடுப்பு அவசியம்

(யாழ்ப்பாணம்)

''கோமாரி நோயினுல் மாடுகள் மாத்திரமின்றி ஆடுகளும், செம்மறி ஆடுகளும் பாதிக்கப்படலாம். தடுப்பூசி போடுவதினுல் மட்டும் இந் நோயைக்கட்டுந்படுத்த முடியாது. நோய்வராமல்தடுப்பதற்கான நடைவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும்'' என்று வடபிராந்திய கால்நடை உற்பத்தி சுகாதாரத் திணைக்கள உதவிப்பணிப்பாளர் விடுத்துள்ள வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார்.

புதிதாக ஆடுகளையும், மாடுகளையும் வாங்கவோ, கட்டாக்காலியாக விடவோ தோட்டங்களிலும், வயல்களிலும், பாதை ஓரங்களிலும் கால்நடைகளை மேய விடவோ பொது நீர் நிலைகளான குளங்களிலும். கேணிகளிலும் நீர் அருந்தவோ விடவேண்டாம் என்றும் இவற்றை முறையாகக் கடைப்பிடித்தால் கால்நடைகளைக் 'கோமாரி. நோயிலிருந்து காப்பாற்ற முடியும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கோமாரி நோயின் காரணமாக அழிக்கப்பட்ட மாடுகளுக்கு ஒரு கிலோ கிராம் உயிர் நிறைக்கு 6 ரூபா 50 சதம் வீதம் நஷ்டஈடு வழங்கப்படும் என்றும் மேலதிகவிபரங்களுக்கு கால்நடை உத்தியோகத்தரைச் சந்திக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (54)

## நியமனம்

(வேலணை)

வேலணை சரஸ்வதி வித்தியாசாலையில் அதிபராகக் கடமையாற்றிய திரு. பொன்னையா நடராசா கடந்த வாரம் ஓய்வு பெற்றதைத் தொடர்ந்து உப அதிபராகக் கடமையாற்றிய திரு. சு. திசநாயகம்பிள்ளை பதில் அதிபராகப் பதவியேற்றுள்ளார்.

# "சனசமூக நிலையங்களுக்குரிய நன்கொடைப் பணத்தை அதிகரிக்கவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

வருடா வருடம் சனசமூக நிலையங்களுக்கு வழங்கப்படும் நன்கொடைப் பணத்தை 2,000 ரூபாவாக உயர்த்தித் தருமாறு, யாழ். மாநகரசபை சனசமூகநிலையங்களின் சமாசச் செயலாளர் திரு. கா. பீதாம்பரம், வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ், சடாட்சர சண்முகதாசனிடம் நேரடியாக மகஜர் மூலம் கேட்டுள்ளார்.

வேம்படி மகளிர் கல்லூரியில் நடைபெற்ற யாழ் மாநகரசபை சனசமூகநிலையங்களின் சமாச இடைக்காலப் பொதுக்கூட்டத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வடக்கு கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திரு. எஸ். சடாட்சர சண்முகதாஸிடம் மகஜர் கையளிக்கப்பட்டது.

மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:

''யாழ் மாவட்டத்திலுள்ள பதிவுபெற்ற சகல சனசமூக நிலையங்களும் தத்தமது உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குள் ஒன்றிணைந்து சனசமூகநிலைய சமாசங்களை அமைத்துள்ளார்கள். அவ்வாறு அமைக்கப்பெற்ற சனசமூகநிலைய சமாசங்கள்ஒருங்கிணைந்து மாவட்ட ரீதியாக ஒரு சம்மேளனத்தைத் தெரிவுசெய்துள்ளன. சனசமூகநிலையங்களைப் பதிவு செய்வது போன்று. உதவி அரச அதிபர் பிரிவுகளிலுள்ள சமாசங்களையும், மாவட்ட ரீதியாக உள்ள சம்மேளனத்தையும் முறையே பிரதேச சபைகளிலும் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திலும் பதிவுசெய்வதற்கு கடந்த நான்கு வருடங்களுக்கு மேலாக முயற்சிசெய்து வருகின்றேம். சமாசங்களையும், சம்மேளனத்தையும் பதிவு செய்வதற்கு எற்ற நடவடிக்கைகளை எடுக்குமாறு வேண்டுகிறேம். கட்டிட நிர்மாண மற்றும் ஒப்பந்தங்களைச் செய்வதற்கு கிராமமுன்னேற்றச் சங்கங்களுக்கு வழங்கப்படுவது போன்று சனசமூக நிலையங்களுக்கும் ஏழரை லட்ச ரூபாவுக்குட்பட்ட ஒப்பந்த வேலைகளைச் செய்வதற்கான அனுமதியினை சகல திணைக்களங்களுக்கும் தெரியப்படுத்துவதன் மூலம் இக் கருமத்தை சுலபமாக்குமாறு கேட்டுக்கொள்கிறேம். அதே நேரத்தில் வன்செயலால் பாதிக்கப்பட்ட சனசமூகநிலையங்களை மீள நிர்மாணிப்பதற்கான நிதியினையும் பெற்றுத் தருமாறு கேட்டுக்கொள்ளுகின்றேம்'', (153)

# "இன்றுள்ள சூழ்நிலையை நன்கு பயன்படுத்துவோம்"

### - நிமால்

(கிளிநொச்சி)

''இன்றுள்ள அமைதிச் சூழ்நிலையை தமிழ் மக்கள் சரவரப் பயன் படுத்த வேண்டும்'' என்று கிளிநொச்சி கனகபுரத்தில் இடம்பெற்ற பௌர்ணமி விழாவில் சிறப்புரையாற்றுகையில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணி கிளிநொச்சி மாவட்ட மாணவர் பிரிவுப் பொறுப்பாளர் திரு. நிமால் குறிப்பிட்டார்.

கிளிநொச்சி கனகபுரம் கிருஷ்ணர் ஆலய பரிபாலனச் சபைத் தலைவர் திரு. எஸ்.சிவராசலிங்கம் தலைமையில் இவ் விழா சிறப்பாக நடைபெற்றது. பெருந் தொகையானேர் விழாவில்கலந்துகொண்டனர்.

திரு. நிமால் மேலும் பேசுகையில் ''விடுதலைப் போராட்டத்தில் தமிழ் மக்கள் நெருக்கமான ஈடுபாடுடையவர்களாக விளங்குகிறுர்கள். பல்வேறுதியாகங்களைப் புரிந்துள்ளனர். எதிர்காலத்திலும் சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட திடசங்கற்பம் கொள்ளவேண்டும். கொண்ட குறிக்கோள்களிலும் உறுதியிலும் நாம் இறுக்கமாகவேயுள்ளோம்'' என்ருர். (83)

## விசேட பொதுக் கூட்டம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் விசேட பொதுக் கூட்டம் எதிர்வரும் பதின்நான்காம் திகதி திங்கட்கிழமை நடைபெறவுள்ளது.

சங்கத்தின் இயக்குநர்கள் ஏற்கனவே பதவி துறந்துள்ளதைத் தோடர்ந்தே புதிய இயக்குநர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு கூட்டுறவு அபிவிருத்தி அலுவலர் திரு. எஸ். சந்திரசேகரம் இக் கூட்டத்தைக் கூட்டியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (133)

## திருப்பணி வேலைகள்

(பருத்தித்துறை)

ஸ்ரீ வல்லிபுரஆழ்வார் ஆலய 'பாலஸ்தாபனம்' அண்மையில் நடைபெற்றது.

ஆலய மூலஸ்தானத் திருப்பணி வேலைகள் பூர்த்தியடைந்ததும் இம் மாதம் நடுப்பகுதியில் கும்பாபிஷேகம் நடைபெறும். ஆலய இராஜகோபுர திருப்பணி வேலைகளும் பூர்த்தியடைந்து வருகின்றன. (52)


'ஈழநாடு'

வார மலர்

13- 05 - 1990

- வானெலி நாடகம் (தொடர் கட்டுரை)
- கிழக்கும் மேற்கும் (தொடர்கவிதை)
- தாய்மை விழித்தது (சிறுகதை)
- கிழக்கில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்
- மொரிசியசில் இரு வாரங்கள்
- நல்லூரை அழிய விடலாமா?
- கைத்தொழில் உலகில்
- விலங்கு விசர்
- மாணவர் மன்றம்
- மங்கையர் மஞ்சரி
- ஞாயிறு மஞ்சரி

மற்றும்

வழக்கமான அம்சங்கள்

பக்கங்கள் - 12

விலை ரூபா 3/-

# "மாணவர்கள் மத்தியில் தூயதமிழை ஆசிரியர்கள் அறிமுகப்படுத்தவேண்டும்"

(உடுவில்)

''எல்லா மொழிகளிலும் தமிழ்மொழி இனிமைவாய்ந்தது. பேசப்பேச மனதுக்கு மகிழ்வையும் நிறைவையும் தரவல்லது. இத்தகைய தமிழ்மொழி சிதைக்கப்படாமல் பாதுகாக்கப்படவேண்டும்''

இவ்வாறு இணுவில் அமெரிக்கமிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெற்ற தமிழ்த்தின விழாவில் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்து உரையாற்றிய பாடசாலை அதிபர் திரு. எஸ். சோதிப்பெருமாள் கூறினர்.

பாடசாலைத் தமிழ் மன்றத் தலைவர் திரு. சு. தெட்சணுமூர்த்தி விழாவுக்கு தலைமை வகித்தார்.

அதிபர் திரு. எஸ். சோதிப்பெருமாள் மேலும் பேசுகையில், தமிழ் மொழியை பொறுத்தவரை அதன் வளர்ச்சிக்காக எத்தனையோ சீர்திருத்தங்களும் முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனுல் பல ஆசிரியர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகைகள் யாவும் சரியான முறையில் எழுத்துப் பிழையின்றி இலக்கணப் பிழையின்றி தமிழை எழுதத் தவறுகின்றன. இலக்கண வழுவை தற்காலத்தில் எவருமே கவனிப்பதில்லை. பாடசாலைகளில் தமிழ் எழுத்துக்களை பிழையின்றி எழுதப் பயிற்றுவிக்க வேண்டும். இன்றைய சந்ததியினர் சுத்தமான தமிழை எழுத தவறிவிடுகின்றனர். வேற்றுமொழிக் கலப்பு, வேற்றுமொழி உச்சரிப்பு எல்லாம் ஊடுருவல்செய்யப்பட்டு தமிழின் வளர்ச்சியை தடைசெய்ய முயல்கின்றன. பாடசாலை மாணவர்களின் எழுத்துக்களில் வரிக்கு வரி பல பிழைகள் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. தமிழ்மொழியை போதிக்கும் ஆசிரியர்கள் மாணவர் எழுத்துப் பிழையின்றி எழுதக்கூடியதாக பயிற்றுவிக்கவேண்டும். தமிழ் மொழி ஆசிரியர்கள் மட்டுமல்ல ஒவ்வொரு பாடசாலை ஆசிரியர்களும் எழுத்துப் பிழைகளை சுட்டிக்காட்டி நல்ல தமிழை எழுத பயிற்றுவிக்கவேண்டும்'' என்ருர்.

ஆசிரியர்கள் திரு. சிவசோதிநாதன், திருமதி ச. மகாலிங்கம் ஆகியோரும் உரையாற்றினர். மாணவர்களின் பேச்சு நடனம், நாடகம், வில்லுப்பாட்டு போன்ற பல்வேறு நிகழ்ச்சிகளும் விழாவில் இடம்பெற்றன. தமிழ் மொழிக்குப் பொறுப்பான ஆசிரியை திருமதி ச. மகாலிங்கம் மேற்படி விழாவினையும், நிகழ்ச்சிகளையும் நெறிப்படுத்தியிருந்தார். (109)

# கைப்பணி உற்பத்திப் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவில் கைப்பணி உற்பத்திப் பயிற்சி நிலையம் ஒன்று நெடுந்தீவில் ஆரம்பிக்கப்படவிருக்கிறது.

இம் மாதம் 25-ம் திகதி இப்பயிற்சி நிலையத்தை இயங்க வைப்பதற்கான நடவடிக்கைகளை செஞ்சிலுவைச் சங்கத்தின் நெடுந்தீவுப் பிரதிநிதி திரு. கே. கணபதிப்பிள்ளை மேற்கொண்டுள்ளார். இப்பயிற்சி நெறிக்கென முப்பது யுவதிகள் தெரிவுசெய்யப் பட்டுள்ளனர். (123)

# கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் ஆய்வுக் கட்டுரைப் போட்டியில் நாகேஸ்வரனுக்கு முதற் பரிசு

(கொழும்பு)

கொழும்புத் தமிழ்ச்சங்கம் ஆண்டுதோறும் நடத்தும் பரிசில்களும் தேர்வுகளும் '1989' போட்டியில் 'பேராசிரியர் க. கைலாசபதி நினைவுப் பரிசில்-மகாகவி பாரதியார் இலக்கிய ஆய்வுக் கட்டுரைக்கு திரு. கனகசபாபதி நாகேஸ்வரனுக்கு முதற்பரிசு கிடைத்துள்ளது.

கொழும்புத்தமிழ்ச் சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. க. இ. க. கந்தசுவாமி போட்டி முடிவுகளை அறிவித்துள்ளார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை விரிவுரையாளரான திரு. நாகேஸ்வரன் ''மகாகவிபாரதியார் இலக்கியங்களும் தமிழ்மொழி உணர்வுகளும்'' என்னும் பொருளில் ஆய்வுக் கட்டுரையினைச் சமர்ப்பித்திருந்தார். இக்கட்டுரைக்கு ரூபா 500 சன்மானமும் பாராட்டிதழும் கிடைத்துள்ளது.

# "இன்றைய எமது அமைதிப்பெருமூச்சு நிரந்தரமானதல்ல!" - பாப்பா

(நாவற்குழி)

''தமிழ்மொழி பேசுகின்ற ஒரே காரணத்தனுல் கொலை செய்யப்பட்டோம், தாக்கப்பட்டோம், இரத்தக்களரியைக்கண்டோம். இவ்வாருன பல தடைகளையும், களங்களையும் கண்டு இன்று எந்தவித சச்சரவுமின்றி, துப்பாக்கி வேட்டுச் சத்தங்களின்றி இருக்கின்ரோம். நாம் விடுகின்ற இந்த அமைதிப் பெருமூச்சு நிரந்தரமானதல்ல. எம்மைக் கொன்று குவிப்பதற்காகப் பலர் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர்கள். அவற்றையெல்லாம் நாம் வேரோடு அழித்து எமது மண்ணைப் பாதுகாக்க வேண்டும். அதற்கு அனைவரும் ஒத்துழைத்து எமது தமிழீழ விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியைப்பலப்படுத்த வேண்டும்''.

இவ்வாறு நாவற்குழியில் நடைபெற்ற தமிழ்த்தின விழாவில் பங்குபற்றிப் பேசுகையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பா தெரிவித்தார்.

மகாவித்தியாலய அதிபர் திரு. த. முத்துக்குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. பாப்பா தொடர்ந்து பேசுகையில் ''நாம் இன்று உயர்ந்த நிலையில் உலகம்போற்றும் நிலையில் நிற்கின்ரேம் என்ருல் அதற்கு காரணம் எமது தலைவர் திரு. வே.பிரபாகரனுகும். தலைநிமிர்ந்து நிற்கக் காரணமாக நின்றவர்கள் வீரகாவியம் படைத்த, சரித்திரம்படைத்த நாமிழந்த 1357 வீரர்களேயாகும்.''

இவ்விழாவில் கைதடி நாவற்குழி பிரதேசஅரசியல் பொறுப்பாளர் திரு. அப்பன் பேசுகையில்; ''எமக்கு சுதந்திரம் கிடைக்கும்வரை நாம் எமது பலத்தைப் பாதுகாக்க வேண்டும். இன்று இலங்கைஅரசாங்கம் எம்முடன் பேச்சு நடத்துகின்றது என்ருல் அதற்கு காரணமே எமது பலம்தான். அரசியல் ரீதியாகஎம்மிடையே மாற்றங்கள் ஏற்பட்டதே தவிர எமதுநோக்கம் துளிகூட மாறவில்லை. பலபோராட்டங்களினுல் சிந்திய இரத்தத்தின் மத்தியிலேயேநாம் இன்று நிற்கிரேம். திருமணம் செய்தவர்கள்கூட எம்முடன் சேர்ந்து போராடலாம். பிரச்சனைகள் தீராதபட்சத்தில் பல மாணவர்கள் கல்வியை எறிநது விட்டு எம்முடன் போராட்டத்தில் இறங்குவார்கள்.'' என்ருர். (107)

# விண்வெளியில்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

சிறிது சிறிதாகஇழந்துகொண்டிருந்தனர்.

அது சரி எடையற்ற நிலையில் வலுவான பிடிமானம் எதற்கு?

சாதாரண தெம்பாவது இருக்கவேண்டும் அல்லவா? அதைத்தான் குறிப்பிட்டேன். ஆனுல் விண்வெளியில் கைகளின் வலுவைக் கொண்டு சமநிலையைப் பேணுவது மிகக் கடினமாகும். ஆகவே தொடர்ந்து களைப்பு மேலிடுகிறது. மனரோவும் டிட்டோவும்விண்கலத்துக்குத் திரும்பி வந்தபோது என் கண்களை என்னுலேயே நம்பமுடியவில்லை. மனரோவ் தமக்கு ஏற்பட்ட சிக்கலான நிலைமையை என்னிடம் விளக்கிக் கூறினுர். ஒரு குறிப்பிட்ட தருணத்தில் விண்வெளி நிலையத்தின் மேற்பகுதியில் முதுகை சாய்ந்தபடி நின்று கொண்டிருந்தார். இணைப்புக் கயிற்றை எட்டிப் பிடித்துத் திரும்புவதற்கு முடியாத சூழ்நிலையில் அவர் நின்றிருந்தார்.

அதாவது ஒருகரப்பான் பூச்சி மேசையின் மீது மல்லாந்து கிடப்பதுபோல அவரது நிலை இருந்தது என்று கூறலாமா?

அப்படிக் கூறுவது மிகவும் சரியாக இருக்கும். அவரால் தம் கால்களைக்கொண்டு நகர முடிந்தது; ஆனுல் எதையும் பற்றிக்கொள்ளமுடியவில்லை. மிகவும் பரபரப்பான சூழ்நிலை அது!

அப்புறம், இந்த இணைப்புக் கயிறு எதற்கு? விண்வெளி நிலையச் சுவரோடு தொடர்பு அறுந்துபோனுலும் கைகளைப் பயன்படுத்தி விண்வெளி நிலையத்தின் திட்டிவாசலை அடைத்துவிடலாம் அல்லவா?

இந்தப் பாதுகாப்பு நடவடிக்கையும் அவ்வளவு பாதுகாப்பானதல்ல. இப்படி கற்பனைசெய்துகொள்ளுங்களேன். நீங்கள் தொடர்பிழந்து விடுகிறீர்கள். இணைப்புக்கயிற்றை இயக்கிப் பயன்படுத்துவதற்காக உங்கள்கைகளையும், கால்களையும் நகர்த்துகிறீர்கள்; குட்டிக்கரணம் போடத் தொடங்குகிறீர்கள்; அப்போது அந்த நீளமான இணைப்புக் கயிறு உங்களையும் சேர்த்து முறுக்கிக்கொள்ளாது என்பதற்கு உத்தரவாவதம் உண்டா?

ஈர்ப்பு விசையற்ற நிலைமையில் நீங்கள் இருக்கும்போது அந்தச் சிக்கலை உங்களால் எப்படி அவிழ்க்க முடியும்?

விண்வெளியில் நடக்கும் பொழுது, இப்பொழுது மேற்கொள்ளப்படும் பல நடவடிக்கைகளுக்கு இவ்வளவு சக்தி செலவழியுமானுல் அண்மை வருங்காலத்தில கோத்திணைக்கும் பணிகள் எவ்விதம் நடைபெறும்? இந்த மின்விர் விண்வெளி நிலயத்துடன் புதிய விண்வெளிக்கூடுகள் இணைக்கப்படுமா?

ஆமாம், ஏராளமான பணி காத்திருக்கிறது. இவற்றை உடலுழைப்பின் மூலம் செய்வது என்பது, காலாவதியான தொழில்நுட்ப உத்தியைப் பயன்படுத்திச் செய்வது என்றே பொருள்படும்.

நன்றி: புதுப்புனல்

# வீதி விபத்துக்கள் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் பல பாகங்களிலும் தினம் தவருது நடைபெற்றுவரும் வீதி விபத்துக்களில் நேற்றுமுன்தினம் ஏழு பேர் விபத்துக்குள்ளாகினர். இவ்விபத்துக்களில் மோட்டார் சைக்கிள் விபத்தே அதிகமாக இடம்பெற்றுவருவது குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணம் ஐந்து சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள்-வான் விபத்தொன்றில் ஆனையிறவு தட்டுவங்கொட்டியைச் சேர்ந்த இராசதுரை சிவகுருநாதன் (வயது 49) என்பவர் படுகாயமடைந்தார்.

யாழ்ப்பாணம் குருநகரில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் இனந்தெரியாத சுமார் 65 வயது மதிக்கத்தக்க வயோதிபர் ஒருவர் படுகாயமடைந்தார்.

நீர்வேலியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் அச்செழுவைச் சேர்ந்த அன்னலிங்கம் ஸ்ரீராஜ் (வயது 18) இளைஞர் படுகாயமடைந்தார்.

சங்கானையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் சங்கானையைச் சேர்ந்த நாகநாதன் சஞ்சீவி (வயது 17) என்பவர் படுகாயமடைந்தார்.

காரைநகரில் இடம்பெற்ற சைக்கிள் விபத்தொன்றில் வாரிவளவைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை கந்தையா (வயது 70) என்ற வயோதிபர் படுகாயமடைந்தார்.

புதுக்குடியிருப்பில் இடம்பெற்ற பஸ் விபத்தொன்றில் புதுக்குடியிருப்பைச் சேர்ந்த வீரசிங்கம் சுபாகரன் (வயது 11) எனும் சிறுவன் படுகாயமடைந்தான்.

மந்திகையில் இடம்பெற்ற சிறிய உழவு இயந்திர விபத்தொன்றில் மந்திகையைச்சேர்ந்த கார்த்திகேசு ஜெயராசா (வயது 40) என்பவர் படுகாயமடைந்தார்.

காயமடைந்த அனைவரும் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (56)

# பனம்தும்புத்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

தப்பட்ட வரவு செலவுத்திட்ட நிதியிலிருந்து இருபத்தேழாயிரம் ரூபாவை மன்னுர் மாவட்டத் திட்டமிடல் பிரிவு ஒதுக்கியுள்ளது.

இத்தொழிற்சாலையின் புனரமைப்பு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பனை அபிவிருத்திச் சபையின் மன்னுர் மாவட்ட உத்தியோகத்தர் தெரிவித்தார். (123)

# "இராமங்களில் தொழில் வாய்ப்பு ஏற்படுத்தவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

'பாதிக்கப்பட்ட வறிய மக்களுக்கு உணவும், உடையும் வழங்கிவிட்டால் மட்டும் அவர்களது வாழ்வு மேம்பட்டு விடமுடியாது. நிரந்தரமான வாழ்வுக்கும், வருமானத்திற்கும் வழிகாட்ட முயலவேண்டும். கிராமங்களில் போதிய மூலவளம் இருந்தும் தொழிலின்றி, வருமானமின்றி வாழும் மக்களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்துவது எமது முக்கிய கடமையாகும். கிராம மட்டத்தில் உழைக்கும் சக்தியுள்ள பெண்களுக்கு வருமானம் பெறும் வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். இப்பணி மூலம் வறுமையை அகற்றவும் தொழில் வளத்தைப் பெருக்கவும் முடியும். இதற்கு உதவுவதே எமது நோக்கமாகும்.'.

செஞ்சிலுவைச் சங்கத்தின் ஆதரவில் மண்டை தீவில் பனம் பொருள் கைப்பணி உற்பத்திப் பயிற்சி நிலையத்தை ஆரம்பித்துவைத்து உரையாற்றிய யாழ். செஞ்சிலுவைச் சங்கத்தின பொருளாளர் திரு. கே. பாலசுப்பிரமணியம் இவ்வாறு தெரிவித்தார்.

மண்டைதீவு மறுமலர்ச்சி இயக்கத் தலைவரும்; பனை அபிவிருத்திச் சபையின் பணிப்பாளர்களில் ஒருவருமான திரு. எஸ். பாலசிங்கம் தலைமையில் நடந்த இவ் வைபவத்தில் முப்பது யுவதிகள் மேற்படி பயிற்சியில் ஈடுபட்டனர்.

திரு. பாலசுப்பிரமணியம் தொடர்ந்து பேசுகையில்' ''வெளிநாட்டு வருமானங்கள் எமக்கு நிரந்தரமானதல்ல. எமதுநாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி உழைத்து உயர முன்வரும் வறிய மக்களுக்கு தொழில் வாய்ப்பை ஏற்படுத்தி உதவிசெய்து பொருளாதாரத்தை உயர்த்தவும், வேலைவாய்ப்பை அதிகரிக்கவும் முடியும்'' என்ருர்.

# கிளிநொச்சியிலும் கடனுதவித் திட்டம்

(யாழ்ப்பாணம்)

அரசாங்கத்தின் 15 லட்சம் வீடமைக்கும் திட்டத்தின்கீழ் கடன்வழங்கும் நடவடிக்கைகள் கிளிநொச்சி மாவட்டத்திலும் ஆரம்பமாகியுள்ளது.

இதற்கமைய கிளிநொச்சி மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையால் பூநகரி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு 500 விண்ணப்பப் படிவங்கள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. பூநகரி உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் இவ்விண்ணப்பப் படிவங்கள் தற்பொழுது விநியோகிக்கப்படுகின்றன.

கடன் விண்ணப்பங்கள் இம்மாதம் 23ம் திகதிக்கு முன்னர் ஒப்படைக்கப்படும் என்று கோரப்பட்டுள்ளது. (56)

# இளைஞர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

பாலைப்பழம் பிடுங்கச்சென்ற இளைஞர் ஒருவர் பாலைமரத்திலிருந்து விழுந்து படுகாயமடைந்தார்.

முல்லைத்தீவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் ஆனைக்கோட்டையைச் சேர்ந்த தங்கராசா விஜயராசா (வயது 17) என்பவரே படுகாயமடைந்தவராவார்.

காயமடைந்தவர் கால் முறிந்த நிலையில் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

# இந்துசமயப் போட்டி முடிவுகள்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கத்தின் அனுசரணையுடன் இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சினால் வடமராட்சியில் நடாத்தப்பட்ட இந்துசமயப் போட்டிகளின் முடிவுகளை இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சு வெளியிட்டுள்ளது பண்ணிசை, பேச்சுப் போட்டி முடிவுகளின்படி 1ம், 2ம், 3ம் இடங்களை பெற்றுக்கொண்ட மாணவர்களின் விபரங்கள்:

**பேச்சுப் போட்டி**

மேற்பிரிவு 1ம் இடம் செல்வி என். மணிமேகலா புலோலி, 2ம் இடம் செல்வி பிரோகிணி வரணி, மத்திய பிரிவு 1ம் இடம் செல்வி ஆர். கோசலை புலோலி, 2ம் இடம் செல்வி வி. சிவதர்சினி அச்சுவேலி, 3ம் இடம் செல்வி எஸ். சிவபாலினி கரவெட்டி. கீழ்ப்பிரிவு 1ம் இடம் செல்வி வி. கிருஷ்ணசந்திரா புலோலி, 2ம்இடம் செல்வி ஆர்.பாமினி கரவெட்டி, 3ம் இடம் செல்வன் வி. விஜயபாஸ்கர் பருத்தித்துறை,

**பண்ணிசைப் போட்டி**

மேற்பிரிவு 1ம்இடம் செல்வி எஸ். சௌதாமினி வல்வெட்டித்துறை 2ம் இடம் செல்வி மா. சிவானி கரவெட்டி, 3ம் இடம் செல்வி எஸ். கௌரி தும்பளை, மத்திய பிரிவு 1ம் இடம் செல்வி என். ஜெயபாரதி கரவெட்டி, 2ம் இடம் செல்வி எஸ். கலாதேவி தும்பளை, 3ம் இடம் செல்வி பீ ஸ்ரீசீதா அல்வாய், கீழ்ப்பிரிவு 1ம் இடம் செல்வி எஸ்.சுபோதினி அல்வாய், 2ம் இடம் செல்வி எஸ். பகீரதி கரவெட்டி, 3ம் இடம் செல்வி எஸ் ராதாகுமாரி கரவெட்டி.

கட்டுரைப் போட்டிக்கான முடிவுகள் இன்னமும் அறிவிக்கப்படவில்லை.

இப்பேச்சு, பண்ணிசைப் போட்டிகள் கொழும்பில் இம்மாதம் 26, 27ம் திகதிகளில் நடைபெறுமெனவும், இப்போட்டிகளில் 1ம் 2ம் இடங்களைப் பெற்றுக்கொண்ட மாணவர்கள் கொழும்பில் நடைபெறும் போட்டிகளில் கலந்துகொள்ளுமாறும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பதில் பணிப்பாளர் திருமதி சாந்தி திருநாவுக்கரசன், பருத்தித்துறை இந்து இளைஞர் சங்கத்திற்கு அறிவித்துள்ளார். (52)

## தேசிய வீரர் தினம்: மாணவர்களுக்கு

# மும்மொழியிலும் கட்டுரை பேச்சுபோட்டி நடத்த ஏற்பாடு

(உடு ல்)

இவ்வாண்டில் தேசிய வீரர்கள் தினத்தைக் குறிக்கும் முகமாக மாணவர்களுக்கான அகில இலங்கை கட்டுரை பேச்சுப்போட்டிகளை நடாத்த கல்வி உயர்கல்வி அமைச்சின் செயற்பாட்டுக்கிளை முடிவு செய்துள்ளது.

இது சம்பந்தமாக இராஜாங்க கல்வி அமைச்சரின் செயலாளரும், கல்வி, உயர் கல்வி அமைச்சின் மேலதிகச் செயலாளருமான திருமதி கே. ஜ. விக்கிரமசிங்க பாடசாலை அதிபர்களுக்கு அனுப்பி வைத்துள்ள சுற்றறிக்கையில் பின்வருமாறு தெரிவித்துள்ளார், போட்டிகளை இவ்வமைச்சுடன் இணைந்து கலாசார அலுவல்கள் அமைச்சு ஒழுங்கு செய்துள்ளது:

கட்டுரை, பேச்சு ஆகிய போட்டிகள் கனிஷ்ட பிரிவு-சிரேஷ்ட பிரிவு என இருபிரிவுகளாக தனித்தனியே நடைபெறும்.

ஆண்டு 6 முதல் 8 வரை கனிஷ்ட பிரிவாகவும் ஆண்டு 9 முதல் 13 வரை சிரேஷ்ட பிரிவாகவும் கொள்ளப்படும். போட்டிகள் தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் நடைபெறும்.

கோட்டங்கள். மாகாணங்கள், அகில இலங்கை ஆகிய மூன்று நிலைகளில் நடைபெற உள்ள இப்போட்டிகளுக்கு கோட்டக் கல்வி அதிகாரிகளும் மாகாணக் கல்விப்பணிப்பாளர்களும் வேண்டிய ஒழுங்குகளை மேற்கொள்ளுவர்.

அகில இலங்கை நிலையில் போட்டிகளை நடாத்துவதற்கு கலாசார அலுவல்கள் பணிப்பாளர் பொறுப்பாக இருப்பார்.

ஒவ்வொரு மொழியிலும், ஒவ்வொரு பிரிவுப் போட்டியிலும் முதல் 5 இடங்களுக்குத் தெரிவுசெய்யப்பட்ட ஒவ்வொரு போட்டியாளருக்கும் பெறுமதியான புத்தகப் பொதி ஒன்றுடன் சான்றிதழ்களையும் கலாசார அலுவல்கள் திணைக்களம், தேசிய நூலகச் சேவைச் சபையின் ஆதரவுடன் முதலாமிடம் பெறுபவருக்கு 1,000 ரூபாவும், இரண்டாம், மூன்றும் இடங்களை பெறுவோருககு முறையே 750 ரூபாவும், 500 ரூபாவும் பணப் பரிசாக வழங்கும்.

ஒவ்வொரு மொழி மூலமும் சிரேஷ்ட பிரிவுப் போட்டியில் முதலாம், இரண்டாம், மூன்றும் இடங்களைப் பெறும் போட்டியாளர்களுக்குச் சான்றிதழ்களுடன் தலா 1,500 ரூபா, 1,000 ரூபா, 750 ரூபா பணப் பரிசை கலாசார அலுவல்கள் திணைக்களம் வழங்கும்.

ஒவ்வொரு மொழியிலும், ஒவ்வொரு பிரிவிலும் தெரிவு செய்யப்படும் முதல் மூன்று கட்டுரைகளை எழுதிய போட்டியாளர்கள் மே மாதம் 22ம் திகதி கொழும்பில் எடுக்க இருக்கும் விழாவுக்கு கலாசார அலுவல்கள் பணிப்பாளரால் அழைக்கப்படுவர். அழைக்கப்படுபவருக்கும், அவருடன் துணை வரும் இருவருக்கும் கொழும்பு வந்து திரும்புவதற்கான பேருந்துச் செலவையும் கலாசார அலுவல்கள் பணிப்பாளர் வழங்குவார். (109)

## தோட்டத் தொழிலாளர் விவகாரம்:

# அமைச்சரின் முடிவிற்கு கம்யூ. கட்சி (இடது) கண்டனம்

(யாழ்ப்பாணம்)

''பல வருடங்களுக்கு முன்பு இந்திய பிரஜாவுரிமைக்கு விண்ணப்பித்து கடவுச்சீட்டுப் பெற்றுக்கொண்ட ஒரு லட்சத்திற்கு அதிகமான தோட்டத் தொழிலாளர்களை உடனடியாக இந்தியாவிற்கு அனுப்பி வைக்கவேண்டும எனத் தோட்டத் தொழில் துறை, பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் வெளிப்படுத்தியுள்ள கூற்று மிக விசனத்திற்குரியதாகும். அரசின் மனிதாபிமானமற்ற இம்முடிவை இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) வன்மைமாகக் கண்டிக்கின்றது. அத்துடன் சுயவிருப்பின்றி எந்த ஒரு தோட்டத் தொழிலாளியும் கட்டாயத்தின் பேரில் இந்தியாவிற்கு அனுப்பப்படுவதை எமது கட்சி எதிர்க்கின்றது.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி (இடது) மத்திய குழு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளது. மேற்படி அறிக்கையை கட்சியின் பொதுச் செயலாளர் சி. கா. செந்தில்வேல் வெளியிட்டுள்ளார்.

மேலும் அவ் அறிக்கையில் ''அன்று இந்திய பிஜாவுரிமைக்கு விண்ணப்பித்து கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்கு தோட்டத் தொழிலாளர்கள் மத்தியில் இருந்த பொருளாதார, அரசியல்,இன வன்முறை போன்ற நிர்ப்பந்த சூழ்நிலைகளைக் கணக்கில் கொள்ளாது கடவுச்சீட்டுப் பெற்ற ஒரே காரணத்திற்காக அவர்களை நாட்டைவிட்டு அகற்றவேண்டும் என அதட்டி நிற்கும் அரசின் நிலை முழுத் தோட்டத் தொழிலாளர்களையும் அச்சுறுத்துவது போன்றதாகும். தனக்கு தேவைப்படும் போது தோட்டத் தொழிலாளர்களை அணைப்பதும் தேவை முடிந்ததும் அதட்டி அடிக்க முனைவதுமான போக்கையே இந்த அரசு பின்பற்றிவந்துள்ளதை அமைச்சரின் நாடு கடத்தும் கூற்று வெளிப்படுத்தியுள்ளது. மறைமுகமான அல்லது நேரடியான கட்டாயத்தின் பேரில் சுயவிருப்பமின்றி தனி ஒரு தோட்டத் தொழிலாளிதானும் விமான மூலமோ அன்றி கப்பல் மூலமோ இந்தியாவிற்கு அனுப்பப்படுவது மனித தர்மத்தை நேசிக்கும் சகலராலும் எதிர்க்கப்படவேண்டிய தொன்றாகும்.''

# அரவம் தீண்டும் அபாயம் அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் அரவம் தீண்டும் அபாயம் அதிகரித்துள்ளது. கடந்த இரு தினங்களில் மட்டும் ஒருபெண் உட்பட ஐந்துபேர் அரவம் தீண்டி யாழ். ஆஸ்பத்தி அவசர சிகிச்சைப் பகுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

அனுமதிக்கப்பட்டுள்ளோர் விபரம்: எஸ். வள்ளிப்பிள்ளை (வயது 54) கைதடி, செல்வராசா ஜெயசீலன் (வயது13) கரவெட்டி, செல்லத்துரை செல்வக்குமார் (வயது16)வசாவிளான், எம். பொன்னுத்துரை (வயது 61) அளவெட்டி தெற்கு, முருகர் இராசா (வயது 64) தம்பாலை. (56)

# "விடுதலைப் போராட்டத்துக்கு மக்கள் பலம் மிகமுக்கியம்!"

\- கந்தன்

(நாவற்குழி)

''விடுதலைப் போராட்டங்களைப் பொறுத்தவரை அரசியல் போராட்டம், ஆயுதப் போராட்டம், ராஜதந்திரப் போராட்டம் என்பன முக்கியமானவை. இதைப் போலவே ஆயுதபலம், மனோ பலம், மக்கள் பலம் ஆகிய முப்பலங்களும் விடுதலைப் போராட்டங்களுககு முக்கியமானதாகும்.''

இவ்வாறு தமிழீழவிடுதலைப் புலிகளின் சாவகச்சேரிப் பிரதேசப் பொறுப்பாளர் திரு. கந்தன் தெரிவித்தார்.

கச்சாய் அம்மன்கோவில் முன்றலில் லெப்டினன்ட் நிதியின் அஞ்சலிக் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. கந்தன் தொடர்ந்து பேசுகையில்; ''இன்றைய காலகட்டத்தில் மக்கள் பலம் மிகவும் முக்கியமானது. தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மக்களின் ஆதரவு உண்டா என்று உலக நாடுகள் உன்னிப்பாகக் கவனித்துக்கொண்டேயிருக்கின்றன. இதைப் பொதுமக்களாகிய நீங்கள் நிரூபித்துக்காட்ட வேண்டும். இலங்கை இராணுவம் எமது பலத்தைக் கணித்தே எம்மைப் பேச்சுக்கு அழைத்தது. எமது உரிமைகளைத் தர மறுத்தால் நாம் மீண்டும் ஆயுதப்போராட்டத்தில் ஈடுபடும் நிலை உருவாகும். சிங்கள இனவாதத்திற்கெதிராக நாம் போராட்டம் நடத்தியிராவிட்டால் இதுவரை ஏராளமான சிங்களக் குடியேற்றங்கள் அமைந்திருக்கும் என்றார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் தென்மராட்சி மகளிர் படைப் பிரிவு பொறுப்பாளர் செல்வி குமுதினி பேசுகையில்; ''காலம் காலமாக எமது மக்கள் ஒடுக்கப்பட்டுவருகிறார்கள், இந்த அடக்குமுறைக்கு எதிராகவே நாம் போராடுகிறோம். இந்தக் காலத்தில்தான் மக்கள் ஒத்துழைப்புத்தர வேண்டும். அதேவேளையில் பெண்கள் போராட்டமும் முக்கியமானதாகும். யுவதிகள் சளைக்காமல் போராட்டத்தில் பங்குபற்றவேண்டும்'' என்றார்.

கச்சாய் கிராம சேவையாளர் திரு. வேலாயுதபிள்ளை, ஆசிரியர் ஜீவரத்தினம், செல்வி பொன்னம்பலம் ஆகியோரும் உரையாற்றினர். (107)

# "விழிப்புலனற்றோருக்கும் வாழ்வு உண்டு!"

(நாவற்குழி)

''விழிப்புலனற்றவர்கள் பல்கலைக் கழகம்வரை சென்று கல்வி கற்க வசதிகள் செய்து கொடுக்கப்படும். அவர்களுக்கும் வாழ்வு உண்டு என்பதை நாம் உணர்ந்து செயற்படவேண்டும், அவர்களைத் தேடி பயிற்சி அளிக்கும் திட்டம் செயலுருப் பெற்றுள்ளது.''

இவ்வாறு கைதடி நவீல்ட் பாடசாலை அதிபர் திரு. எஸ். டேவிட் விழிப்புலனற்றவர்களுக்கான சான்றிதழ்கள் வழங்கும் வைபவத்திற்குத் தலைமை வகித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

நவீல்ட் பாடசாலை மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில் திரு. எஸ். டேவிட் மேலும் பேசுகையில்: ''விழிப்புலனற்றவர்களை வீட்டிலே வைத்திருக்கும் நிலை மாறி அவர்களுக்கு பயிற்சியளித்து அவர்களுக்கும் வேலைவாய்ப்பு உண்டு என்பதை நிருபிக்க வேண்டும்'' என்றார்.

இவ்வைபவத்தில் கலந்துகொண்ட மேற்படி பாடசாலை முகாமையாளர் திரு. ஏ. சி. கனகராசா பேசுகையில்; ''ஒரு வருடப் பயிற்தியை முடித்து இன்று சான்றிதழ் பெறும் இவ்வைத்தைப்பார்க்கும் போது அவர்களுக்கும் வாழ்வு உண்டு என்ற செய்தி மக்களுக்கும் தெரிகின்றது இந்தச் செய்தி கிராமம் கிராமமாக எடுத்துச் செல்லப்படவேண்டும்'' என்றார்,

தையல் பயிற்சி பெற்ற மூன்று பெண்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டதுடன் தையல் மெசின்களும் அன்பளிப்புச் செய்யப்பட்டன. விழா இறுதியில் 'புதிய வாழ்வு புதிய பாதை' எனும் நாடகமும் இடம்பெற்றது. (107)

# ஜாக்குலினுக்கு பாராட்டு விழா

(புலோலி)

பிரான்ஸ் வைத்தியக்குழு இணைப்பு உத்தியோகத்தர் செல்வி ஜாக்குலினின் சேவை நலம் பாராட்டுவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலையில் பல வருடங்கள் கடமையாற்றிய செல்வி ஜாக்குலினின் சேவை நலம் பாராட்டு விழாவினை மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை அபிவிருத்திச் சபை ஏற்பாடு செய்துள்ளது.

வைத்தியசாலை மண்டபத்தில் மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி. கதிரைவேற்பிள்ளை தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் பிரதம விருந்தினராக பேராசிரியர் அ. துரைராசாவும் சிறப்பு விருந்தினர்களாக யாழ். பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் டாக்டர் ந. கனகசபை, யாழ். பல்கலைக் கழக விலங்கியல் துறைத் தலைவர் பேராசிரியர் வீ, கே. கணேசலிங்கம் ஆகியோரும் கௌரவ விருந்தினர்களாக வடமராட்சி வடக்கு (பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் திரு. வை. வேலும் மயிலும், வடமராட்சி தென் மேற்கு (கரவெட்டி) உதவி அரசாங்க அதிபர் திரு. இ. ஐயாத்துரை, வடமராட்சி கிழக்கு (மருதங்கேணி) உதவி அரசாஙக அதிபர் திரு. ரி. சந்திரசேகரம் ஆகியோரும் கலந்து கொள்வார்கள்.

செல்வி ஜாக்குலினுக்கு பொதுமக்களாலும் பிரியாவிடை வைபவம் நடத்த ஏற்பாடாகி வருகிறது. (61)

# இன்றைய உதைபந்தாட்டம்

(யாழ்ப்பாணம்)

அகிலஇலங்கை ரீதியில் பாடசாலைகளிடையே நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டி யாழ். மாவட்டத்திலும் ஆரம்பமாகியுள்ளது.

இலங்கை உதைபந்தாட்ட சம்மேளனத்தின் ஆதரவில் நடைபெறும் இப் போட்டியில் யாழ். மாவட்டத்திலிருந்து இம்முறை ஏழு பாடசாலைக் கோஷ்டிகள் பங்குபற்றுகின்றன.

இன்று இளவாலை சென் ஹென்றீஸ் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும் ஆட்டத்தில் குருநகர் சென், ஜேம்ஸ் மகாவித்தியாலய கோஷ்டியும், சென். ஹென்றிஸ் கல்லூரிக் கோஷ்டியும் மோதுகின்றன. (வி)

## மீண்டும்
# தெற்கே தாக்குதல் அதிகரிப்பு பொலிஸார் பலத்த காவல்

(கொழும்பு)

தென்பகுதியில் மீண்டும் தீவிரவாதக் குழுக்களின் தாக்குதல்கள் அதிகரித்திருப்பதையடுத்து அனைத்து உல்லாச பயணிகள் விடுதிகளுக்கும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் பொலிஸார் ரோந்து நடவடிக்கையிலும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

கடந்த சில வாரங்களாக தீவிரவாதிகளின் பல தாக்குதல்கள் இடம் பெற்றுள்ளனடன் பல கொள்ளைச் சம்பவங்களும் இடம் பெற்றுள்ளன. குறிப்பாக அநுராதபுரத்திலும், பொலநறுவையிலும், கொழும்பிலும் உல்லாசப் பயணிகளிடமும், விடுதிகளிலும் இச்சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

தென் பகுதியில் அண்மைக் காலமாக சுமுகநிலை ஏற்பட்டு உல்லாசப் பயணிகளின் வருகை பெருமளவு அதிகரித்துள்ள இவ்வேளையில் இச்சம்பவங்கள் இதனை பாதிக்கலாமென அச்சமும் பாதுகாப்பு வட்டாரங்களில் ஏற்பட்டுள்ளது. (சி)

## மோட்டார் சைக்கிள் விபத்தில் 6பேர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

நேற்று யாழ்ப்பாண மாவட்டத்தில் பல பகுதிகளிலும் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்துக்களில் ஆறு பேர் படுகாயமடைந்தனர்.

யாழ்ப்பாணம் ஆரியகுளம் சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - ஆட்டோவிபத்தொன்றில் இருவர் படுகாயமடைந்தனர்.

காயமடைந்தவர்களில் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சரவணமுத்து பிரியாந்தன் (வயது 18) என்பவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

சுன்னாகத்தில் இடம்பெற்ற மோட்டார்சைக்கிள்-சைக்கிள் விபத்தொன்றில் மயிலங்காட்டைச் சேர்ந்த என். தெய்வேந்திரம் (வயது 30) என்பவர் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

கரவெட்டியிலிடம் பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் துன்னாலையைச் சேர்ந்த ஆர். பொன்ராசா (வயது 30) என்பவர் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

மல்லாகத்தில் இடம்பெற்ற லொறி விபத்தொன்றில் படுகாயமடைந்த நாகேஷ் இராசதுரை (வயது 30) என்பவர் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார்.

யாழ். வைத்தீஸ்வராச் சந்தியில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தொன்றில் நல்லூரைச் சேர்ந்த பத்மநாதன் நாகரத்தினம் (வயது 43) என்பவர் படுகாயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். (56)

### அடுத்த ஆண்டு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஆரம்பத்தில் ஞாயிற்றுக் கிழமைகளில் மாத்திரம் 10 நிமிட செய்தியாக ஆரம்பித்து பின் படிப்படியாக சனி, புதன் கிழமைகளிலும் ஒலிபரப்பப்பட்டுவந்த தமிழோசை நிகழ்ச்சி கடந்த பலவருடங்களாக கிழமைகளில் 6 நாட்கள் நடைபெற்று வருவதும் குறிப்பிடத்தக்கது.

பி. பி. ஸி. யில் ஹிந்தி பிரிவு ஆரம்பிக்கப்பட்ட 50-வது ஆண்டு நிறைவுநாள் நேற்று வெகு விமர்சையாகக் கொண்டாடப்பட்டதும் குறிப்பிடத்தக்கது. [சி]

### பாடசாலை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலவச உணவு வழங்குவதில் முறைகேடுகள் நிகழ்வதாக கிடைத்த புகார்களையடுத்தே, கூட்டுறவு சங்கக் கடைகள், பாடசாலை கூட்டுறவுக் கடைகள் மூலம் உணவு முத்திரை வழங்கும் புதிய திட்டம் விரைவில் அமுல் செய்யப்படவுள்ளது. (அ)

### அமரர் வணசிங்க

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத் தலைவர் திரு. கா. சோமசுந்தரம் தலைமையில் இந்த நினைவஞ்சலிக்கூட்டம் நடைபெற்றது. தொடர்ந்து திரு. பொன் வேணுதாஸ் உரையாற்றுகையில்,

தமிழினத்தின் சுபீட்சத்திற்காக கொள்கைவழியில் அஞ்சா நெஞ்சத்துடன் அயராதுழைப்புடன் அதிவேகத்துடனும், அதிதீரத்துடனும் போராடிய ஒப்புயர்வற்ற தலைவர். சிறந்த தொழிற்சங்கவாதியென எல்லோராலும் பாராட்டப்பட்ட உத்தம தலைவர். தமிழ் இனத்திற்கு பல நன்மைகளையும், சேவைகளையும் செய்துள்ளார்.

தமிழினத்தின் விடுதலைக்காக குரல்கொடுத்து வாதாடியதற்காக தலைவர் வணசிங்கா சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பில் தொழிற்சங்க சம்மேளனத்தை அமைக்க அயராது பாடுபட்டார்

அமரர் வணசிங்கா தமிழீழ கொள்கையில் மிக உறுதியாக இருந்தார். அவரது கொள்கைகளையும் இலட்சியங்களையும் நிறைவேற்றி வைப்பதற்கு ஓரே அணியில் தொடர்ந்து செல்வோம் என்றார்.

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்க மட்டக்களப்பு மாவட்ட தலைவர் திரு. வி த. குமாரசாமி மேற்படி நினைவஞ்சலிக் கூட்டத்தில் பேசியபோது தெரிவித்ததாவது:

போராடத் தயங்காத துணிவு கொண்ட தலைவர் வணசிங்கா கண்டகளங்கள் பல, கலங்காத மனம் படைத்த இவர் தமிழர்களுக்காக, தமிழர் ஆசிரியர்களுக்காக, ஆசிரியர் சங்க வளர்ச்சிக்காக இலங்கையின் நாலா திசைகளிலும் ஓடிஓடி உழைத்தார். தலைவர் வணசிங்காவின் பேச்சு மூச்சு, செயல், சிந்தனை அனைத்தும் தமிழர் ஆசிரியர் சமுதாயத்துக்கு அர்ப்பணிக்கப்பட்டிருந்தது என்றால் அது மிகையாகாது.

தமிழுக்கு உழைத்து பொருளாதாரத்தில் ஓடாய்த்தேய்ந்த அமரர் வணசிங்காவின் சீவியம் கண்ணீர்க கதையாகவே கடைசிவரை அமைந்து விட்டது.

வடக்கும்-கிழக்கும் இணைய வேண்டுமென்று தமிழாசிரியர் சங்கமூலம் எடுத்துக்காட்டினார். ஆசிரியர் சங்கமும் ஆசிரியர் சமுதாயமும் உள்ளவரை அமரர் வணசிங்காவின் புகழ் மங்காது என்றார். (153)

### விரைவில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்க அதிபர்கள் ஆகியோரைச் சந்திக்கும் நோக்கத்துடனேயே இவரது இந்த விஜயம் அமையவிருக்கிறது.

இத்தகவலை பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜயரத்ன கடந்த செவ்வாய்க்கிழமை தெரிவித்தார். இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டின் 279 உதவி அரசாங்க அதிபர்களையும் நேரடியாக சந்திக்க ஜனாதிபதிவிரைவில் சகல பகுதிக்கும் விஜயம் செய்வார். உதவி அரசாங்க அதிபர்களையும், கிராமசேவகர்களையும் இதன்போது தனித்தனிப்பிரிவாகவும் சந்திப்பாரெனவும் அரசாங்கத்தின் கொள்கையின்படி அடிமட்டத்திலிருந்து அபிவிருத்திப்பணிகளை மேற்கொள்ளும் பொருட்டே இந்நடவடிக்கையாகுமென்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (சி)

### சிபார்சு கடிதங்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மாக, நிகழ்ந்து வந்துள்ள இம்முறைகேடான நடைமுறை முடிவுக்குக் கொண்டுவரப்படுமெனவும், இது இனி மேல் இடம்பெற ஒருபோதும் இடமளிக்கப்படமாட்டாது எனவும், அரசாங்கத்துறையின் சகல பதவி நியமனங்கள், உயர்வுகள் தகுதி, திறமைஉட்பட, இன விகிதாசாரத்தின் அடிப்படையிலேயே நடைபெறுமெனவும் அமைச்சர் திரு. அத்துலத்முதலி மேலும் தெரிவித்துள்ளார். (அ)

### புதிய நியமனங்கள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

படும். இக்குழு இது பற்றிய விபரங்களை குறிப்பிட்டகாலத்திற்கு முன்னதாகவே வெளியிடும். போட்டிப்பரீட்சைகளும் நேர்முகப் பரீட்சைகளும் நடாத்தப்படும். பரீட்சார்த்திகளுக்கு மருத்துவ பரிசோதனைகளும் நடைபெறும்.

திறமை அடிப்படையிலும் பெற்ற தகுதிஅடிப்படையிலும் சகல தெரிவுகளும் இடம் பெறும். அரசியல், தனிப்பட்ட எந்தச் சிபார்சுகளும் கண்டிப்பாக ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. இவை பற்றி நடவடிக்கையும் மேற்கொள்ளப்படுமென்றும் அறிக்கை குறிப்பிட்டுள்ளது. (சி)

## சாம் தம்பிமுத்து கொலைச்சம்பவம்:
# கொலையாளிகள் விரைவில் கைதாகலாம் என பொலிஸார் நம்பிக்கை!

[கொழும்பு]

பாராளுமன்ற உறுப்பினர் திரு. சாம் தம்பிமுத்துவை படுகொலை செய்த கொலையாளிகளை தம்மால் அடையாளம் காட்டமுடியும் என சம்பவத்தை நேரில் கண்ட சாட்சி ஒருவர் நம்பிக்கை தெரிவித்துள்ளதையடுத்து சந்தேக நபர்களை எந்தச் சமயத்திலும், கைது செய்வதற்கான சாத்தியக்கூறுகள் இருப்பதாக குற்றப் புலனாய்வுப் பிரிவைச்சேர்ந்த உயரதிகாரிஒருவர் தெரிவித்துள்ளார்

இதேவேளையில் திரு. சாம் தம்பிமுத்துவின் மனைவியின் உடல்நிலை இன்னும் திருப்திகரமான நிலையில் இல்லாத காரணத்தால், அவரிடமிருந்து கொலைச்சம்பவம் குறித்து வாக்குமூலம் பெறுவதை காலதாமதம் செய்துள்ளதாக, குற்றப் புலனாய்வுப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

இதேவேளையில், இக்கொலையுடன் சம்பநதப்பட்டவர்கள், கொழும்பு நகர்ப்புறத்தில் அமைந்துள்ளவிடுதிகள், தங்குமிடங்களில் மறைந்திருக்கலாம் என்ற சந்தேகத்தில் பொலிசார் இவ்விடங்களைப் பலத்த சோதனைக்குட்படுத்தியுள்ளனர். (அ)

## முட்டைக்கு வெளியே கோழிக்குஞ்சு பொரிக்க வைப்பு!

[பீக்கிங்]

சீனாவில் முட்டைக்கோதுக்கு வெளியே அதன் கருவை எடுத்து, அடைகாப்பு கருவிக்குள் வைத்து கோழிக்குஞ்சைப் பொரிக்கவைக்கும் உயிரியல் விஞ்ஞானத்தில் சீன விஞ்ஞானி ஒருவர் சாதனை படைத்துள்ளார்!

இரண்டு வருடங்களுக்கு முன்னர், அடைகாப்பு கருவிக்குள் கோழிக்குஞ்சை பொரிக்கவைக்கும் பரிசோதனை, பிரிட்டனில் மேற்கொள்ளப்பட்டது.

இதனைத்தொடர்ந்து சீன விஞ்ஞானி இப்பரிசோதனையில் வெற்றிகண்டுள்ளார். [அ]

### வி. பி. சிங்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

திரு. வி. பி. சிங் இன்று நேரில் பார்வையிடுவார்.

பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கென இந்திய அரசு ஏற்கனவே 86 கோடி ரூபா ஒதுக்கியுள்ளது. (அ)

# சுதந்திரக்கட்சி பிளவுபடலாம் புதிய கூட்டணி உருவாகும்?

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இரண்டாகப் பிளவுபடும் சாத்தியக் கூறுகள் அதிகரித்துள்ளதாக தெரிய வருகிறது. பிளவுபடும் கட்சியின் ஒரு பிரிவு கம்யூனிஸ் கட்சிகளுடன் கூட்டணி அமைப்பொன்றை ஏற்படுத்தலாமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கூட்டணிக்கு தலைமை தாங்க திரு. அநுரா பண்டாரநாயக்கா அழைக்கப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. இக்கூட்டணியில் கம்யூனிஸ் கட்சி, எல். எஸ். எஸ். பி. ஸ்ரீலங்கா மக்கள் கட்சி (விஜயகுமாரணதுங்க பிரிவு) அங்கம் வகிக்கும்.

மேலும் இக்கூட்டணி தத்தமது கட்சிகளின் சின்னங்களை தவிர்த்து பொதுச் சின்னம் ஒன்றினையும், புதிய கட்சிக் கொடியையும் தெரிவு செய்யும். இதன்படி இக்கூட்டணி 'கை' சின்னத்தை இழப்பதுடன் நீலம், சிவப்பு, ஊதா நிறத்தைக் கொண்ட மூவர்ண கொடியை பெறும் என்றும் தெரியவருகிறது. (சி)

### சினிமாதியேட்டர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

படையினர் இந்தத் தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்டபோது அங்கிருந்து சப்மெஷின் துப்பாக்கிஒன்றும் நூறு ரவைகள், மூன்று கிறனேட்டுகள் ஆகியவை கண்டெடுக்கப்பட்டன.

கிரனேட்டுகள் வெளிநாட்டில் தயாரிக்கப்பட்டவை என தெரியவந்துள்ளது.

பொலிசார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

### சூறுவளி

(1-ம்பக்கத் தொடர்ச்சி)

திரி திரு. வி. பி. சிங்குக்கு அனுப்பிவைத்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரண உதவியாக 1000 கிலோ தேயிலையையும் இலங்கை அனுப்பிவைக்கவுள்ளது.

### மன்னார் ஆதார

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சத்திரசிகிச்சை வார்ட்டுக்கு முக்கிய கவனம் செலுத்தப்பட்டதுடன் இதற்கு பிரான்சு நாட்டு வைத்தியகுழு பொறுப்பாக இருந்து சேவையாற்றி வருகிறது.

ஆய்வு கூடத்தை தரமுயர்த்துவதற்கு, பொறுப்பாக சுவிற்ஸலாந்து ஆய்வுகூட நிபுணர் கடமையாற்றி வருகிறார்.

படுக்கை வசதி 120 லிருந்து 180 அக அதிகரிக்கப்பட்டுள்ளது, புனர்வாழ்வு, புனர் நிர்மாண சமூகநிலவிருத்தி அமைச்சின், செயலாளர் திரு. சரித்த ரத்வத்தை முன்னிலையில் இவ்வைத்தியசாலை, ஒப்படைக்கப்பட்டது. (அ)

### பயிலுநர் ஆசிரியர் சேவைப் பயிற்சி

(நாவற்குழி)

கிளிநொச்சி மாவட்டத்தில் தெரிவுசெய்யப்பட்ட பயிலுநர் ஆசிரியர்களுக்கான சேவைக் காலப் பயிற்சி வகுப்பு இன்று ஆரம்பமாகிறது, இவ் வகுப்புகள் தொடர்ந்து சனி. ஞாயிறு நாட்களில் நடைபெறும். (107)

### செயற்குழு கூட்டம்

(வட்டுக்கோட்டை)

யாழ். மாவட்ட சனசமூக நிலையங்களின் சம்மேளனச் செயற்குழுக்கூட்டம் யாழ்ப்பாணம் கொட்டடியில் உள்ள சம்மேளனச் செயலகத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமைகாலை சம்மேளனத் தலைவர் திரு. இ. தவகோபால் தலைமையில் நடைபெறவுள்ளது.

யாழ். மாவட்டத்திலுள்ள சனசமூக நிலையங்களின் தேவைகள், செயற்பாடுகள், சம்மேளனம், சமாஜம் பதிவு செய்தல் முதலான பல விடயங்கள் இக்கூட்டத்தில் ஆராயப்படவுள்ளன. (139)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு வைகாசி மாதம் 12-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.